ஆகஸ்டு - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2045

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 58
பகுதி : 10

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் 15.08.2014 அன்று 68ஆவது சுதந்திரதின விழா மதுரை கே.கே.நகர் அரிமா சங்கத்தினருடன் இணைந்து கொண்டாடப்பட்டது. செந்தமிழ்க் கல்லூரியின் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் தேசியக் கொடியேற்றினார். உடன் தமிழ்ச்சங்கச் செயலர் திரு. இரா. அழகுமலை அவர்கள், கல்லூரித் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள், துணைத்தலைவர் க. முத்தையா பசும்பொன் அவர்கள், அரிமா P.M.C.R. குருமூர்த்தி MFJ அவர்கள், அரிமா P. சந்தோஷ் குமார் அவர்கள், முதல்வர் முனைவர் மு.மீனா அவர்கள் மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 58
பகுதி : 10
ஆகஸ்டு : 2014

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

ஆசிரியர்
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| குறுந்தொகை காட்டும் தலைவி, தோழியின் பாலின பண்புகள் | வீ. மீனாட்சி | 4 |
| திருமலை மன்னரின் உரப்பனூர்ச் செப்பேடு | முனைவர் பி. ஆறுமுகம் | 11 |
| பாவேந்தரின் 'இளைஞர் இலக்கியம்' | முனைவர் நெல்லை. ந. சொக்கலிங்கம் | 18 |
| மணிமேகலையில் சமயப்பொறை | பா. ஆடலரசு | 24 |
| வளாகச் செய்திகள் | முனைவர் மு. மீனா | 30 |
| புறநானூற்றில் போரியல் கருவிகளில் முரசு | க. வீரப்பன் | 31 |

# இதழ் மணம்

அன்புடையீர்!

68ஆவது சுதந்திர தின விழா வணக்கத்தோடு ஆகஸ்ட் மாதச் செந்தமிழ் இதழ் வெளிவருகின்றது. தமிழ் இலக்கியத்தில் உள்ளுறைந்து காணப்படும் மரபையும் பண்பாட்டையும் வெளிக்கொணரும் வகையில் ஆய்வுக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

பொற்புடை நெறியுடைய மகளிரின் பண்புகளைத் தலைவி மற்றும் தோழியை மையமிட்டு, குறுந்தொகை வாயிலாக ஆய்வாளர் வீ. மீனாட்சி வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டிற்குரியது.

மதுரைத் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரி மீது கொண்ட மதிப்பு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் நகரப்பிரமுகர் ஒருவரிடமிருந்து பெறப்பெற்ற உரப்பனூர்ச் செப்பேட்டில் பொதிந்துள்ள தரவுகளையும் வரலாற்றுச் செய்திகளையும், அக்காலத்தில் அரசு நடைமுறைகளையும் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ள முனைவர்.பி.ஆறுமுகம் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

தமிழ்மொழிப் பயன்பாடு நலிந்து வந்த சூழலில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இளைஞர்களிடத்துப் பிழையின்றியும், பிறமொழிச் சொற்களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் இளைஞர் இலக்கியம் படைத்துள்ள பாங்கினை முனைவர்.நெல்லை.சொக்கலிங்கம் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் முன்னோர்களின் சிறந்த பண்பாடுகளுள் ஒன்றான சமயப்பொறை என்னும் பண்பினை மணிமேகலையின் வாயிலாக ஆய்வாளர் பா.ஆடலரசு அவர்கள் ஆய்வுநோக்கில் வெளிப்படுத்தியுள்ளார்.

வீரத்தின் விளைநிலமான தமிழகப் போர்களில் முரசுக்கருவியின் முதன்மைப் பயன்பாட்டை ஆய்வாளர் க.வீரப்பன் அவர்கள், "புறநானூற்றில் போரியல் கருவிகளில் முரசு" என்ற கட்டுரையின் வாயிலாகச் சிறப்புற எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ் இலக்கியத்தின் தொன்மைச் சிறப்பை வெளிப்படுத்தும் ஆய்வுக்கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

- ஆசிரியர்

# குறுந்தொகை காட்டும் தலைவி, தோழியின் பாலின பண்புகள்

வீ. மீனாட்சி
முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

சங்க அகப்பாடல்களில் 'நல்ல' எனும் அடைமொழியோடு குறிக்கப்படும் குறுந்தொகைப் பாடல்கள் காட்டும் தலைவி, தோழியின் பாலினப் பண்புகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது. "பாலினம் என்பது ஆண் என்பதாலும், பெண் என்பதாலும், பாலுக்கேற்ப ஒருவரிடம் எதிர்பார்த்துத் திணிக்கப்படும் உணர்வுப்பூர்வ இயல்புகளைக் குறிப்பது. குணங்களை ஆண்மைக் குணங்கள் என்றும், பெண்மைக் குணங்கள் என்றும் பாலின அடிப்படையில் பகுப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது."

இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது 'பாலினப்பண்பு' என்பது சமூகம் மனித இனத்துள் 'ஆணுக்கு' என்று சில நடத்தைகளையும் குண நலன்களையும், 'பெண்ணுக்கு' என்று சில நடத்தைகளையும் குண நலன்களையும் வரையறுத்து வைத்திருப்பது எனக் கருதலாம். ஆண் என்பவன் வீரம், துணிச்சல், அதிகாரம் போன்ற பண்பிற்கு உரியவன் என்றும், பெண் என்பவள் அடக்கம், பயம், பணிவு, பொறுமை போன்ற பண்பிற்கு உரியவள் என்றும் அமைத்திருப்பது பாலினப்பண்புகள் எனச் சமூகம் கற்பித்துள்ளது.

சங்ககாலச் சமூகம் அகத்தில் பெண்ணிற்குத் தலைமை இடத்தையும் புறத்தில் ஆணுக்குத் தலைமை இடத்தையும் கொடுத்துள்ளது. இதனை, "தமிழ்ப்பண்பாடு வீட்டில் பெண்ணுக்குத் தலைமை தந்தது: நாட்டில் ஆணுக்குத் தலைமை தந்தது". "பழந்தமிழர்கள் பெண்ணுக்குத் தந்த தலைமையும் உரிமையும் அகப்பாடல்களில் காணப்படுகின்றன" எனும் கூற்றுக்கள் மெய்ப்பிக்கின்றன. இத்தகைய சங்ககாலச் சமூக அமைப்பு முறையிலும் பெண்ணிற்கு எனச் சில சமூகக்கட்டமைப்புகள் இருந்துள்ளன இந்தக் கட்டமைப்புகள் அவர்களின் பாலினப்பண்பு நலன்களை நிர்ணயித்துள்ளன.

தலைவி, தோழி, செவிலி, நற்றாய் எனும் பெண் பாத்திரங்கள் இயங்கும் சங்க அகப்பாடல்களின் வழி பெண்ணுக்கு எனப் பொதுவாகச் சமூகம் வரையறுத்து வைத்திருந்த பாலினப் பண்புகளுக்கான கட்டமைப்புகள் புலப்படுகின்றன. இதில் ஒத்த வயதை உடைய தலைவி, தோழி என்ற இருவரின் பாலினப் பண்புகள் சில வேறுபாடுளைக்

கொண்டதாகச் சங்கப்புலவர்கள் தம் பாடல்களில் காட்டி இருப்பது சிந்தனைக்கு உரியதாக அமைகிறது.

## தலைவியின் பாலினப்பண்புகள்

தமிழர்களின் தொன்மை இலக்கண நூலாகிய தொல்காப்பியம்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

என்று தலைவிக்குரிய இலக்கணத்தைக் களவியலில் குறிப்பிட்டுள்ளது. இம்மரபினை அடியொற்றி இயற்றப்பட்டுள்ள குறுந்தொகைப் பாடல்கள் மேற்கூறப்பட்ட நூற்பாவின் அடிப்படையில் தலைவியைக் காட்டுகின்றன.

"கொண்கன் ஊர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்
தென்கடல் அடைக்கரைத் தெளிர்மணி ஒலிப்ப
காணவந்து நாணப் பெயரும்
அளிதோ தானே, காமம்
விளிவது மன்ற நோகோ யானே." (குறுந். 212)

எனும் பாடல், 'தான் சென்று பார்ப்பதற்கு அரிய தலைவன் தன் பொருட்டுத் தன்னைக் காண வந்த போதும் நாணம் வருத்தியதால் தான் அவனைக் காணச் செல்லவில்லை' என்ற தலைவி பாடுவதாக அமைந்துள்ளது. மேலும் தலைவனைக் காண வேண்டும் எனும் வேட்கை, 'நாணம்' என்ற பண்பினால் அடக்கப்பட்டு விடுகிறது என்பதும், தனது நிலையை அயலவர் அறிவர் என அஞ்சி தலைவி, தலைவனுடைய மணியோசை கேட்டும் அவனைக் காணச் செல்லவில்லை என்பதும் தலைவி நாணம் எனும் பண்பிற்கு உரியவளாகப் படைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. தலைவி 'மடம்' என்ற பண்பிற்கு உரியவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள்.

"மடம் என்பது இளமையோடு கூடிய உயரிய ஓர் இயற்கை. கற்றவை கேட்டவை என்பவற்றுள் தக்கவற்றை விடாப்பிடியாகக் கொள்ளும் கொள்கை வீறு" என்றும், "தான் கைக்கொண்ட கொள்கையை நெகிழ விடாமையாகிய பேதைமை" என்றும் மடம் என்ற பண்பிற்கு விளக்கமளிக்கப்படுகிறது. இத்தகைய மடம் எனும் பண்பிற்கு உரியவளாகத் தலைவியைக் காட்டும் குறுந்தொகைப் பாடல் வருமாறு :

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும் துறைவனோடு
யாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்த்தற்கு அரிது அது முடிந்தமைந்தன்றே" (குறுந். 313)

இப்பாடலில் தலைவி, 'தலைவனுடன் கொண்ட நட்பு யாராலும் கட்டவிழ்க்க இயலாத முடிச்சு' என மொழிகிறாள். இது அவளின் மன உறுதியைக் காட்டுகிறது.

"பலரும் கூறுக, அஃது அறியாதோரே
அருவி தந்த நாட்குரல் எருவை
கயம்நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோகாமை நற்கு அறிந்தனென் யானே" (குறுந். 170)

எனும் பாடலில் கருவூர்க்கிழார், 'தான் தலைவனோடு கொண்ட நட்பானது பால்வரை தெய்வத்தால் கூட்டப்பட்டது; அது இடையே அழிவதன்றிப் பின்னரும் தொடரும்' என்ற தலைவியின் மனவுறுதியைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

மேலும் சங்கத் தலைவி,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று..."

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்ப, தனது உயிரைக் காட்டினும் சிறந்ததாக நாணத்தையும் அந்த நாணத்தைக் காட்டிலும் சிறந்த அறமாகக் கற்பினையும் பேணுபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். இதனை, " களவில் ஒருவனை விரும்பிப் பின்னர் வேறொருவனை மணக்கும் பழக்கம் பண்டைத் தமிழ் மக்களிடம் காணப்படவில்லை. ஒரு பெண் தன் காதலனையன்றி, வேற்று ஆடவனை விரும்பினாள் என்றோ, காதல் தோல்வியால் இறந்துபட்டாள் என்றோ கூறும் குறிப்புகள் சங்க நூல்களில் காணப்படவில்லை" என்று உறுதி செய்வர். இதனால் தலைவியின் கற்பு நெறியின் மேன்மையை அறிய முடிகிறது.

தன் கணவனை உயிராக மதிக்கும் தலைவியின் பண்பு சங்க அக இலக்கியங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது. சான்றாக,

"வினையே ஆடவர்க்கு உயிரே ; வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்
................" (குறுந். 135)

"உயிர்க்குஉயிர் அன்னர் ....." (குறுந். 218)

எனும் பாடற்பகுதிகளரல் அறிய முடிகிறது. தலைவியானவள் தன் கணவனைத் தன் உயிருக்கு நிகராகக் கருதிய பாங்கினை இவை சுட்டுகின்றன.

## பொறுமையின் உறைவிடம்

தலைவன் எத்தகைய துன்பத்தை ஏற்படுத்திய போதும்

தலைவியானவள், சினம் கொண்ட தாயை மீண்டும் மீண்டும் நாடும் குழந்தையைப் போல அவன் அருளை வேண்டுபவளாக இருக்கின்றாள்.

"நனைமுதிர் .....

................................

'அன்னாய்' என்னும் குழவிபோல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்,
நின் வரைப்பினள், என் தோழி " (குறுந். 397)

என்று தலைவனிடம் தோழி உரைப்பதன் மூலம் தலைவியானவள் பொறுமையின் உறைவிடமாகத் திகழ்வதைக் காண முடிகிறது.

இவ்வாறு தலைவியானவள் அச்சம், மடம், நாணம், கற்பு நெறி, பொறுமை போன்ற பாலினப் பண்புகளுக்கு உரியவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். இருந்தாலும் சில இடங்களில் தனது ஆற்றாமை காரணமாகத் தொன்மைச் சமூகத்தின் வழிவந்த 'பாலினப்பண்புகளின் மரபு மீறல்' என்ற நிலைக்கு உரியவளாக ஆட்படுவதையும் குறுந்தொகையில் காணமுடிகிறது.

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன், யானும் ஓர் பெற்றி மேலிட்டு
'ஆஅ! ஒல்' எனக்கூவுவேன் கொல்? -
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவுநோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே." (குறுந். 28)

எனும் ஔவையார் பாடலும்,

"யானும் ஓர் ஆடுகள மகளே ....... (குறுந். 31)

எனும் ஆதிமந்தி பாடலும்

"காலே பரிதப்பினவே ...... (குறுந்.44)

எனத் தொடங்கும் வெள்ளிவீதியார் பாடலும் இதற்குச் சான்றாக அமைகின்றன. தலைவி தன் ஆற்றாமையால் தன் உணர்வை அடக்க முடியாமல் "தரையில் முட்டிக் கொள்வேனோ? தாக்கிக் கொள்வேனோ? என்பதும், தலைவனைத் தேடிச் செல்லப் புறப்படுவதுமாகப் பெண்பாற் புலவர்கள் பாடியிருப்பது மரபு மீறல் எனும் நிலையினைக் காட்டுகிறது.

## தோழியின் பாலினப் பண்புகள்

தோழியின் பாலினப் பண்புகளை ஆராயும் போது,

"உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய"

எனத் தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் ஆகிய நால்வரிடத்தும்

காணப்படும் பண்புகளைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளதைக் காணமுடிகிறது.

"உயிர் போலக் கொண்ட அன்பும், நாணமும் காத்தல் இல்லாத வெள்ளை உள்ளமும் என்று சொல்லப்பட்ட குற்றமற்ற சிறப்புக்கள் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் நால்வரிடமும் காணப்படும்" என்று இதற்கு உரை வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏற்பத் தோழியின் பாலினப்பண்புகள் அமைந்துள்ளன. தலைவியின் அன்பிற்கு உரியவளாகக் காட்டப்படும் இடத்திலும், தலைவியின் இடத்திலும், தலைவியின் நிலையினைத் தலைவனுக்கு உணர்த்தும் இடத்திலும் தோழியின் பாலினப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனாலும்,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான"

எனும் தொல்காப்பியரின் இலக்கணநெறிக்குப் பல இடங்களில் தோழி பொருந்துபவளாக அமைந்துள்ளாள். தொல்காப்பியர் பெண்ணின் சிறப்பியல்புகள் என்று வகுத்த நெறிக்கு ஏற்பத் தோழியின் பாத்திரப்-படைப்பைப் புலவர்கள் வடித்துள்ளனர். தோழி என்பதற்கு, "தோழி செவிலிக்கு மகளாய், நன்மையுந் தீமையும் ஆய்தலுடன் தலைமகளுக்கு உசாத்துணையாய், அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணைவியாம்" என்று அபிதான சிந்தாமணி விளக்கமளிக்கிறது. "அறிவு சான்ற அக்காலப் பெண்ணுலகிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறாளன்றோ நம் தோழி" என்ற புலவர் குழந்தை உரைப்பதாகவும். "அறிவே உருவாய் வந்து அறமே வழங்கும் உள்ளம் கொண்டு விளங்கும் தோழிபால், சொல்லாற்றல் அளவின்றி அமைந்திருந்தது" என்று கா.கோவிந்தன் குறிப்பிடுவதாகவும் ஆய்வாளர் எடுத்துமொழிவர்.

'பெண்பாலான' எனத் தோழிக்குரிய பாலினப்பண்புகளாகத் தொல்காப்பியர் சுட்டுவனவற்றைச் சங்க அகப்புலவர்கள் தோழிக் கூற்றுக்களாக அமையும் தம் பாடல்களில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

## குறிப்பறிந்து பேசுபவள்

"புரிமட மரையான் கருநரை நல்ஏறு
................................
தென்புலம் படரும் தண்பனி நாளே! (குறுந். 317)

எனும் மதுரைக் கண்டரதத்தன் பாடலில் தோழியானவள் தலைவியின் ஆற்றாமையாகிய உள்ளக் குறிப்பை அறிந்து, "தலைவன் தான் சென்றுள்ள நாட்டில் விலங்குகளின் அன்பு வாழ்க்கையைக் கண்ணுற்று

நிச்சயம் நம் துயர் தீர்க்க விரைந்து வருவான்" என்று உரைக்கின்றாள். இது தலைவிக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைகிறது.

"அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே - அவர்
நல் நெடுங் குன்றம் பாடிய பாட்டே." (குறுந். 23)

எனும் ஔவையார் பாடலில் தலைவியின் உள்ளக் குறிப்பினை மிகவும் நேர்த்தியுடன் கட்டுவிச்சி வாயிலாகச் செவிலிக்கு அறிவுறுத்தும் தோழியின் பாங்கு அவளின் அறிவுத் திறமைக்குச் சான்றாக அமைகிறது.

" கவைமக நஞ்சுஉண் டாஅங்கு
அஞ்சுவல் - பெருமஎன் நெஞ்சத் தானே" (குறுந். 324)

என்று தோழி தலைவனின் இரவுக்குறியினை மறுத்து உரைக்கும் பொழுது, "தலைவனே! நீ தலைவியின் மீது விருப்பம் கொண்டவனாய் இங்கு இரவுப் பொழுது வருவேன் என்கிறாய். தலைவி உன் இரவுப் பொழுது வருகையினால் ஏற்படும் இடர்களை எண்ணி வருந்துகிறாள். நானோ, நஞ்சுண்ட இருகுழந்தைகளின் நிலைபற்றி வருந்தும் தாய் போன்று உள்ளேன்'' என்று வாழ்க்கைக் காட்சி ஒன்றினை உவமையாக்கிப் பாடுகின்றாள். இது இருவரின் நலனிலும் அக்கறை கொண்ட தோழியின் உளப்பண்பைக் காட்டுகிறது.

## குறிப்பால் உணர்த்துபவள்

தோழி எதையும் நேராகக் கூறாமல் குறிப்பால் உணர்த்தி, கேட்போரின் மனதில் கருத்தை ஆழமாகப் பதிவு செய்யும் பண்பிற்கு உரியவள் என்பதைப் பின்வரும் பாடல் வழி அறிய முடிகிறது.

"வேம்பின் பைங்காய் என்தோழி தரினே
'வேம்பூங் கட்டி' என்றனிர் இனியே
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
வெய்ய உவர்க்கும்' என்றனிர் -
ஐய! - அற்றால் அன்பின் பாலே". (குறுந். 196)

என்று தலைவன் களவுக் காலத்தில் தலைவி மீது கொண்ட அன்பிற்கும், கற்புக் காலத்தில் தலைவி மீது கொண்ட அன்பிற்கும் ஏற்பட்ட மாறுதல்களைக் கூறித் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை நயம்பட உரைக்கின்றாள்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசினோரே - சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்
உயிர்தவச் சிறிது: காமமோ பெரிதே!" (குறுந்.18)

எனும் பாடலில் தலைவியின் உயிரானது 'பலாமரத்தின் கொம்பு போன்றது என்றும், அவள் தலைவன் மீது கொண்ட அன்பு வேட்கையானது கொம்பில் பழுத்த பெரிய பலாப்பழம் போன்றது என்றும், கொம்பில் பழுத்த பலா பற்றுக்கோடு இன்றி வீழும் நிலையினைப் போல தலைவியின் வேட்கை உள்ளது என்பதைக் குறிப்பால் உணர்த்தும் பாங்கில் தோழியின் அறிவாற்றல் பண்பினை அறியமுடிகிறது.

தலைவியைப் போன்றே இளம் வயதை உடையவளான தோழி எதிர்பாலினமான தலைவனுடன் பேசும்போது எந்தவிதமான அச்சமுமின்றி துணிவுடன் தன் கருத்தினை எடுத்துரைக்கிறாள். பாணன் தலைவன் பொருட்டு வாயில்நேரும்போது அவனைக் கடிந்துரைத்து நேர்மையுடன் திகழ்கிறாள். நற்றாய், செவிலி, தலைவன், தலைவி என்று அனைவருடனும் இனிமையாகப் பழகுகிறாள்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் நோக்கும்போது தோழியின் பாலினப் பண்பானது தலைவியின் பாலினப்பண்பிலிருந்து வேறுபட்டுள்ளதைக் காண முடிகிறது. மேலும் தொல்காப்பியர் உரைக்கும் பெண்ணின் சிறப்பியல்புகளுக்கான இலக்கணத்தோடு தோழியின் பாலினப்பண்புகள் பல இடங்களில் பொருந்தி வருவதை அறிய முடிகிறது.

## முடிவுகள்

1. அக இலக்கியத்தின் முக்கியப் பாத்திரமான தலைவி, பொதுவில் பெண்களுக்கு எனத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ள இயல்பு நெறிகளின் அடிப்படையிலான பாலினப் பண்புகளைக் கொண்டவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.
2. சில இடங்களில் தன் வேட்கைநிலை மேல்எழும்போது பாலின வரையறையைக் கட்டுடைத்தல் என்ற நிலையிலும் செயல்படத் துடிக்கிறாள்.
3. தலைவிக்கு எனத் தொல்காப்பியம் கூறும் இயல்பான பாலினப் பண்புகளுக்கு வேறுபட்டு அறிவுநிலையிலும் அஞ்சாமையிலும் மேம்பட்ட பாலினப் பண்பை உடையவளாகச் சங்க அகப்பாடல்களில் தோழி காட்டப்பட்டுள்ளாள்.
4. இவ்வாறு தலைவியும் தோழியும் ஒரே சூழலில் வளர்க்கப்பட்டவர்கள் எனினும், ஒருவருக்கு ஒருவர் சற்றே மாறுபட்ட பாலினப் பண்புகளோடு காணப்படுகின்றனர் என்பதை இவ்வாய்வின் வழி முடிகின்றது.

# திருமலை மன்னரின் உரப்பனூர்ச் செப்பேடு

முனைவர் **பி.ஆறுமுகம்,**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

## முன்னுரை

நாயக்க மன்னர்கள் என்றவுடனே நினைவுக்கு வருபவர் திருமலை மன்னர்தான். இவர் நாயக்கர் பரம்பரையில் விசுவநாத நாயக்கரையடுத்து நீண்ட நாள் (கி.பி.1623-1659) ஆட்சி புரிந்தவர். சிறந்த ஆளுமைத் திறன் உடையவர். மதுரையில் சைவத்தையும் வைணவத்தையும் ஒற்றுமைப்படுத்தியதோடு கிறித்தவம் மற்றும் இசுலாமிய மதத்தையும் போற்றினார். மதுரை சித்திரைத் திருவிழா இன்று உலகம் போற்றும் ஓர் உன்னதத் திருவிழாவாக மாறியிருக்கிறதென்றால் அதற்கு அடித்தளமிட்டவர் இவரே எனலாம். மதுரையில் இவர் கட்டிய அரண்மனையும், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலும் இவரின் பெயரையும் புகழையும் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய புகழ்மிக்க திருமலை மன்னர் திருமங்கலம் அருகே உள்ள உரப்பனூர் என்ற கிராமத்தில் பிள்ளைத்தேவன் என்பவருக்கு 'ஊர் முதன்மை'யையும், 'நாட்டாண்மை' என்கிற சிறப்பினையும், பல மானியங்களையும் அளித்துள்ளார். அவற்றை மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் வழிபெறப்பட்ட உரப்பனூர்ச் செப்பேடு வாயிலாக முறையாக ஆய்ந்து வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது. இச்செப்பேடு முதன்முதலாகச் செந்தமிழ் இதழ் வாயிலாக வெளிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இச்செப்பேட்டைக் கொடுத்து உதவிய மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்திற்கு மிக்க நன்றி.

## உரப்பனூரின் வரலாற்றுப் பின்னணி

உரப்பனூரிலுள்ள 'கண்மாய்க் கரையில் முற்காலப் பாண்டியர்களின் சிலைகளும், சிற்பங்களும் உள்ளன. பாண்டிய மன்னர்களில் புகழ்மிக்கவனாய் விளங்கிய பராந்தக வீரநாராயணன் கல்வெட்டும், சோழர்களில் புகழ்மிக்க வீரனாய்த் திகழ்ந்த இராசராசசோழனின் கல்வெட்டும் (அம்மன் கோவிலில் உள்ளது) இவ்வூரில் அமைந்துள்ளன. கி.பி.10ஆம் நூற்றாண்டில் இவ்வூர் வளமான பகுதியாகத் திகழ்ந்திருந்தது'. தற்போது இவ்வூர் மேல உரப்பனூர், கீழ உரப்பனூர், ஊராண்ட உரப்பனூர் என மூன்று பெரும் ஊர்களாகப் பெயர் பெற்று வழங்கி வருகிறது.

## உரப்பனூர்ச் செப்பேட்டின் தொடக்கம்

உரப்பனூர்ச் செப்பேட்டில் 'உ' என்ற பிள்ளையார் சுழி

அதையடுத்து 'நாமசெயம்' என்ற சொல் காணப்படுகிறது. 'இவ்வமைப்பு திருமலை நாயக்கர் செப்பேட்டு அமைப்பில் காணப்படும் சிறப்புக்களில் ஒன்றாகும் என்றும், 'பிள்ளையார்சுழியும்', 'நாமசெயமும்' போட்டு எழுதும் வழக்கம் திருமலை நாயக்கர் காலத்தில் பெருகியிருந்தது என்றும் அறியப்படுகிறது. மேலும் செப்பேட்டின் தொடக்கத்தில் 'ஸ்வஸ்திஸ்ரீ' 'சுபாமத்தி' என்ற மங்கலச்சொல் அமைந்திருக்கும். மங்கலச் சொல்லையடுத்து விசயநகர வேந்தர் பரம்பரை, மதுரை நாயக்கர் பரம்பரை, பாளையக்காரர் பரம்பரை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லப்படும். திருமலை நாயக்கர் நாட்டுப்புறங்களுக்குச் சென்று (சீமை பார்த்தல்) ஆங்காங்கே தனி நபர்களுக்கு அளித்த, செப்பேடுகளில் அரச பரம்பரைச் சொற்கள் இருக்காது' என்ற செய்தியும் உள்ளது. உரப்பனூர்ப் பட்டயம் பிள்ளைத்தேவன் என்ற தனி நபருக்குக் கொடுத்த பட்டயம் என அறிய முடிகின்றது.

## உரப்பனூர்ச் செப்பேட்டின் காலம்

திருமலை நாயக்கர் செப்பேடுகளில் 'காலப்பகுதி ஆரம்பத்தையடுத்தே அமையும். பொதுவாக சகாப்தம், தமிழ் ஆண்டு, மாதம், தேதி, பட்சம், கிழமை, திதி, யோகம், கரணம், வேளை, ஓரை, நட்சத்திரம் போன்ற காலக்குறிப்புகளும் காணபடும். மேலும் எளிதில் காலத்தினை அறிந்து கொள்ளும் வகையில் எல்லாக் காலக் குறிப்புக்களும் இல்லாமல் தமிழ் ஆண்டு, தமிழ் மாதம், தேதி (சில வேளைகளில்) கிழமையும் குறித்து வெளியிடப்பட்டுள்ள செப்பேடுகளும் உண்டு'. அவ்வகையில் உரப்பனூர்ச் செப்பேட்டில் 'மன்மதா' என்ற தமிழ் வருடமும் 'ஆனி' என்ற தமிழ் மாதமும் 'திங்கள்' என்ற கிழமையும் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும், மதுரை இரண்டாயிரம் வருடம் பழமையானது என்ற செய்தியும் திருமலை மன்னரைக் 'கர்த்தர்' என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது என்ற செய்தியும் பட்டயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 'திருமலை மன்னர் கி.பி.1623 முதல் 1659 வரை ஆட்சி செய்தார்' என்பர். இவ்வாட்சி ஆண்டுகளில் மன்மதா வருடம் என்பதற்குச் சரியான ஆங்கில வருடம் கி.பி.1655 ஆகும்.

## உரப்பனூர் பிள்ளைத்தேவன் திருமலை மன்னருக்குச் செய்த மரியாதை

உரப்பனூர்ச் செப்பேட்டில் "மதுராபுரித் தலத்துக்குக் கர்த்தராகிய திருமலை மன்னர் அவர்களை உரப்பனூரிலிருக்கும் பிள்ளைத்தேவன் தங்கக்கிளி பண்ணி, வெள்ளிப்பூவு, தங்கப்பூவு செய்து ராசாவைக்

கண்டார்" என்ற செய்தி இடம்பெறுகிறது. அக்காலத்தில் "அரசனையும் பெரியவர்களையும் பார்க்கும்போது பரிசுப்பொருட்கள் பலவற்றை அவர்கள் முன் வைத்துக் காண்பது வழக்கமாக இருந்தது. திருமலை மன்னரை அவரது பயணத்தின் போது பார்த்தவர்கள் அவருக்குக் காணிக்கையாய்ப் பல பொருட்களை அவர்முன் வைத்து மரியாதை செலுத்தியதைப் பல பட்டயங்கள் தெரிவிக்கின்றன". இச்செய்திகளை நோக்கும் போது உரப்பனூர் பிள்ளைத்தேவன் திருமலை மன்னர் தங்கியிருந்த மதுராபுரித் தலத்துக்குச் சென்று மரியாதை நிமித்தமாகத் தங்கத்தாலும் வெள்ளியாலும் பூக்கள் செய்து திருமலை மன்னரைக் கண்டார் என்ற செய்தி புலனாகிறது. "திருவத்தேவன், பேய்த்தேவன் ஆகிய இருவரும் மன்னர் திருமலையைச் சந்தித்தனர். சந்தித்தபோது தங்கப்பூ, வெள்ளிப்பூ, பாற்பசு, அரிசி, ஆட்டுக்கிடாய், பொன் ஆகியன வைத்துக் கண்டனர்" என்ற இராசக்காபட்டிச் செப்பேட்டுச் செய்தியும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

## திருமலை மன்னனிடம் பிள்ளைத்தேவன் பெற்ற மானியநிலமும் பொன்னும்

உரப்பனூர் 'பிள்ளைத்தேவன் திருமலை மன்னரிடம் ஐந்து செய் நஞ்சை நிலமும் ஐந்து செய் புஞ்சை நிலமும் 15 பொன்தங்கமும் மானியமாகப் பெற்றார்' என்ற செய்தி இடம்பெறுகிறது. மேலும் அந்த ஐந்து செய் நஞ்சை நிலம் ஊர்மடையன் நஞ்சைக்குக் கிழக்காகவும், ராச சுந்தத்தேவன் நஞ்சைக்கு மேற்கிலும், கணக்கு ராமலிங்கம் பிள்ளை நஞ்சைக்கு வடக்காகவும், பண்டார வெள்ளையத்தேவன் நஞ்சைக்குத் தெற்காகவும் அமைந்துள்ளது என்றும், புஞ்சைநிலம் நல்ல பிள்ளை பட்டிக்குத் தெற்கிலும், தென்மடல்வூடிய பாதைக்கு மேற்கிலும், பாறைக்கு வடக்கு ஆலங்குளம் பாதைக்குக் கிழக்கிலும் ஆகிய எல்லைகளுக்கு உட்பட்டு இருந்தது என்றும் அந்நிலம் 15 மாதமும் விதைக்கக்கூடிய அளவிற்கு வளமான பகுதியாக இருந்தது என்றும் கூறுகிறது. மேலும் பிள்ளைத்தேவன் நாட்டாமை காவல் அம்பலமானியமாக 15 பொற்காசு (அரை வராகன்) பெற்றார் என்றும் கூறுகிறது. இதை,

"..................... பெ
ரிய குளத்தில் நஞ்சையில் ஊர் மடை
யான நஞ்சைக்குக் கிழக்கு கணக்கு ராம
லிங்கம்பிள்ளை நஞ்சைக்கு வடக்கு ராச
சுந்தத்தேவன் நஞ்சைக்கு மேற்கு பண்
டாற வெள்ளைய தேவன் நஞ்சைக்குத்
தெற்கு இந்த நான்கு எல்கைக்குள்ப்
பட்ட நஞ்சை மானியம் ஐந்து செய்

நிலம் பிஞ்சை மானியம் நல்ல பிள்ளை
பட்டிக்குந் தெற்கு, தென்மடல் வூடிய பா
தைக்கு மேற்குப் பாறைக்கு வடக்கு, ஆலங்கு
ளம் பாதைக்குக் கிழக்கு இதுக்குளப்ப
ட்ட நஞ்சை நிலம் 15 மாதம் விரைப்பா
டு நாட்டாமை மானிப மாடை 15 யிட்ட
காவல் அம்பலம் முதன்மை சகலமும்"

என்ற உரப்பனூர்ச் செப்பேட்டு வரிகளால் அறிய முடிகிறது.

## உரப்பனூர்ச் செப்பேட்டில் ஓம்படைக் கிளவி

உரப்பனூர்ச் செப்பேட்டில் "இதைப் பின்னோர்கள் அப அளித்தால் காறாம் பசுவைக் கொன்றதோசத்திலும் பிராமணரைக் கொன்ற தோசத்திலும் அடைந்து போவாராகவும்" என்ற ஓம்படைக்கிளவி சொல் இடம்பெறுகின்றது. "ஓம்படைக் கிளவி என்பது அளிக்கப்பட்ட உரிமையையும் தானத்தையும் பிறர் ஓம்புமாறு (போற்றி நடக்குமாறு) சொல்லப்படும் சொல்" ஆகும். "திருமலை நாயக்கர் செப்பேட்டில் கையொப்பத்திற்குப் பிறகு ஓம்படைக்கிளவி காணப்படும்" என்று அறியப்படுகிறது. "அப அளித்தல் என்பது தீங்கு செய்தல்" ஆகும். "நாக்கும் மடிக்காம்பும் கருநிறமாக உள்ள பசுச் சாதியைத் தான் காராம்பசு" என்பார்கள். எனவே அக்காலத்தில் காராம்பசுவைக் கொல்லுதலும் பிராமணரைக் கொல்லுதலும் பாவமாகக் கருதப்பட்டது என்ற செய்தி உரப்பனூர்ச் செப்பேடு வாயிலாகப் புலனாகிறது.

"யிதைப் பின்னோற்கள் அடிஅறிவு செய்தால் காறாம் பசுவைக்
கொன்ற தோசத்திலும் பிராமணாளைக் கொன்ற தோசத்திலும்
அடைந்து போவாறாகவும்"

என்றும்,

"யிதை ஆறாமொறுதன் அடிஅளித்தால் ....
.... மீனாட்சி அம்மன் கேட்கும்"

என்றும் திருமலை நாயக்கரின் தருமத்துப்பட்டிச் செப்பேடுகள் கூறுகின்றன. இச்செய்தி மேற்கூறிய செய்திக்கு வலுச்சேர்ப்பதாக அமைகிறது.

## உரப்பனூர்ச் செப்பேடும் மாணிக்கம் ஆசாரியும்

திருமலை மன்னர் காலத்தில் 'கம்மாளரும் (ஆசாரி), பிள்ளை சமூகத்தாரும் தான் பட்டயங்களை எழுதிக் கொடுக்கும் பணியில் இருந்தனர். இவர்கள் கோட்டை வாசல்களிலும் முக்கியமான ஊர்களிலும் வசித்து வந்தார்கள். கோட்டை வாயிலில் இருந்த ஆசாரிகள் கோட்டையைக் க்ாக்கும் பணியாளர்களாகவும் அரச முத்திரைகள்,

ஆணைகள் ஆகியவற்றைக் கண்டு சோதனையிடும் காவலர்களாகவும்' இருந்தனர். உரப்பனூர்ச் செப்பேட்டை மாணிக்கம் ஆசாரி என்பவர் எழுதிக் கொடுத்தார். இதை,

"யிந்தப் பட்டயம் செய்தவன் தெற்குவாச
ல் மாணிக்கம் ஆசாரி"

என்ற உரப்பனூர்ச் செப்பேடு வரிகளால் அறியலாம். 'மாணிக்கம் ஆசாரிக்குச் சொக்கலிங்கம் ஆசாரி என்ற ஒரு மகன் இருந்தார். அவர் மதுரை வடக்கு வாசலிலும், மேலவாசலிலும் பணிபுரிந்தார். மாணிக்கம் ஆசாரி தெற்கு வாசலில் பணிபுரிந்தார். இவர் தருமத்துப்பட்டி இரண்டாம் செப்பேட்டையும் எழுதிக் கொடுத்தார்' என்ற செய்தியும் உண்டு. எனவே தருமத்துப்பட்டி இரண்டாம் செப்பேட்டையும் மாணிக்கம் ஆசாரி செய்து கொடுத்த பட்டயங்களையும் ஆய்வு செய்தால் இன்னும் சில செய்திகள் வெளியாகும்.

## உரப்பனூர்ச் செப்பேடு சுட்டும் சாட்சிகள்

பொதுவாகத் 'திருமலை மன்னர் செப்பேடுகளில் சாட்சியாக விளங்கியவர்கள் பெயர்களும் அவற்றிற்கு இசைவு தெரிவித்துக் கையொப்பமிட்டவர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. செப்பேடு வழங்கப்பட்ட ஊர்ப்பகுதியை நிர்வகிக்கும் பாளையக்காரர்களும், அந்தப் பகுதியைச் சார்ந்த முக்கிய சமூகத் தலைவர்களும், ஊரைச் சேர்ந்த ஆயக்காரர்களும் சாட்சியாகக் குறிப்பிடப்படுகின்றனர். சில செப்பேட்டில் பத்திரகாளியம்மன், அய்யனார், மீனாட்சி, சொக்கர் ஆகிய தெய்வங்களே சாட்சி என்றும் தெய்வங்களைச் சாட்சியாகக் குறிக்கும்' வழக்கமும் காணப்படுகின்றது. அவ்வகையில் உரப்பனூர்ச் செப்பேட்டில் தனக்கன்குளம் நல்லவத்தேவன், பெரியகுருவுடையான், கரிச்சாத் தேவன் ஆகியோர்கள் சாட்சியாக இசைவு தெரிவித்திருக்கிறார்கள். இதை,

"....... இந்
தப்படிக்கு சாட்சி தனக்கன்குளம் நல்
லவத்தேவன் உடன் பங்காளி பெரிய
குருவுடையான் கரிச்சாத்தேவன்"

என்ற செய்தியால் அறிய முடிகிறது. இச்செய்தியிலிருந்து தனக்கன்குளம் என்ற ஊர் திருமலைமன்னர் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்ற செய்தி பெறப்படுகிறது. இவ்வூர் மதுரையிலிருந்து திருமங்கலம் செல்லும் சாலையில் திருநகரையடுத்து உள்ளது.

## உரப்பனூர்ச் செப்பேட்டில் அரச ஆணை

திருமலை நாயக்கரின் செப்பேட்டுச் சாசனத்தில்'அரச ஆணை, 'நாயக்கரின் திருவுள்ளப்படி,' 'விடைகொடுத்தபடி', 'உத்தரவுப்படி' என்று

ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டன'. உரப்பனூர்ச் செப்பேட்டில் உத்தரவுப்படி என்ற சொல் அரச ஆணையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதை,

"திங்கட்கிழமை தினத்தில் ராசா உத்தரவுப்படி"

என்ற உரப்பனூர்ச் செப்பேட்டு வரியால் அறிய முடிகின்றது. இராசக்காபட்டிச் செப்பேட்டில்,

"தாம்பூர சாதினப் பட்டயத்துக்கு உத்தரவாக"

என்ற அரச ஆணை, 'உத்தரவாக'ப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

## திருமலை மன்னர் காலத்து உரப்பனூர் நாட்டாண்மை

திருமலை மன்னர் காலத்தில் நாட்டாண்மைப் பணியில் 'நாட்டாண்மை ஊழியம்', 'இராம நாட்டாண்மை ஊழியம்' என இரண்டு வகை நாட்டாண்மை ஊழியர்கள் இருந்துள்ளனர். ஊர் நாட்டாண்மையை நியமித்தலுக்கும் பட்டயங்கள் கொடுக்கப்பட்டன. அவ்வாறு கொடுக்கும் போது அது நிலமாக இருந்தால் அவற்றிற்கு நான்கு எல்லைகள் 'நான்குமால் விபரம்' என்ற பெயரில் எடுத்துக் கூறப் பெற்றுள்ளன. கிராமநாட்டாமை என்றால் ஒன்று முதல் ஐந்து கிராமங்கள் (சூரி) வரை அவரது பொறுப்பில் இருந்தது. கிராமங்களில் நடக்கும் காரியங்களில் முதல் மரியாதை அந்த நாட்டாண்மைக்காரர்களுக்குத்தான் தரப்பட்டிருக்கிறது". உரப்பனூர்ச் செப்பேட்டில் 'நாட்டாண்மை மானிபமாடை' என்று குறிக்கப்பட்டிருப்பதாலும், நிலங்கள் எல்லைகளாகச் சொல்லப்பட்டிருப்பதாலும், ஐந்து கிராமங்கள் சொல்லாமல் இருப்பதாலும், உரப்பனூர் பிள்ளைத்தேவன், நாட்டாண்மை ஊழியம் பார்த்த நாட்டாண்மையே எனத் துணியலாம். அதனால்தான் அவருக்குப் 15 பொன் கூலியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது போலும். இதை,

". . . . . . . . . . விரைப்பா  
டு நாட்டாண்மை மானிப மாடை  
...பிள்ளை பட்டமும் வெகுமானமு  
ங் கொடுத்து உரப்பனூர் கிராமத்துக்கு முந்தி  
னவன் என்றும் முதன்மை என்றும்  
பெரியகுளத்தில்"

என்ற செய்தியால் அறிய முடிகிறது. இச்செப்பேட்டில் பெரியகுளம் என்ற சொல் இடம் பெற்றிருப்பதால் உரப்பனூரில் சிறியகுளம் ஒன்று இருந்தது எனவும் அறிய முடிகின்றது. "நாட்டாண்மை என்று அழைக்கப்பட்டவர் ஊர் நிர்வாகத்தின் பொறுப்பைக் கவனித்துள்ளர். அவருக்கு ஒன்று முதல் ஐந்து

கிராமங்கள் வரை பொறுப்பில் இருந்தன. அவற்றைச் சுற்றி பார்ப்பதற்கு அரசால் குதிரைஒன்றும் அளிக்கப்பட்டிருந்தது என்றும் அறியப்படுகின்றது".

## உரப்பனூர்ச் செப்பேடும் தெய்வங்களும்

இச்செப்பேட்டில் முதலில் பிள்ளையார்சுழியும் ( கணபதி ) அடுத்து 'றாமசெயமும்' ( பெருமாள் ) அதற்கடுத்து 'வேணும் மீனாள் துணை' ( மீனாட்சியம்மன் ) என்றும், கடைசி வரியில் 'குமரன் துணை' என்று முருகக்கடவுள் பெயரும் சுட்டப்பட்டிருத்தலையும் காணமுடிகின்றது.

## உரப்பனூர்ச் செப்பேட்டில் திருமலை மன்னர் கையொப்பம்

திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகளில் "அரசருடைய கையொப்பம் வரும் பகுதியில் திருமலை நாயக்கர் கையொப்பமும் பாளையக்காரர் ஒப்பமும், கையொப்பம் வருகின்ற இடத்தில் 'எழுத்து' என்ற வாசகமும்" ஆவணப்படுத்தப்பட்டிருக்கும். அவ்வகையில் உரப்பனூர்ச் செப்பேட்டில் திருமலை நாயக்கர் திருக்கரத்தால் ஒப்பம் செய்யப் பட்டிருக்கிறது. இதை,

"யிந்தப்பம் திருராசா திருக்கறத்தினால்
லப்பம்"

என்ற உரப்பனூர்ச் செப்பேட்டு வரிகளால் முடிகின்றது.

"யிந்தப்படிக்கு கற்த்தறாகிய திருமலைணாயக் கறவர்கள்
திருக்கறத்தால் ஒப்பம்"

என்று மங்கலமரபுச் செப்பேட்டிலும் கையொப்பம் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## முடிவு

- உரப்பனூர்ச் செப்பேடு திருமலை நாயக்கரை 'மதுராபுரிக் கர்த்தர்' என்று குறிப்பிடுகின்றது.
- பட்டயத்தில் 'ர'கரத்திற்குப் பதில்'ற'கரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- திருமலை மன்னர் காலத்தில் கள்ளர் இனத்தாருக்குப் பிள்ளைப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி உரப்பனூர்ச் செப்பேட்டில் பதிவாகியுள்ளது.
- திருமலை மன்னர் காலத்தில் அரசரைப் பார்க்கச் செல்வோர் மரியாதை நிமித்தமாக மன்னருக்குத் தங்கம், வெள்ளி ஆகியவற்றால் ஆன ஆபரணங்கள் செய்து கொண்டு சென்ற செய்தியும் உரப்பனூர்ச் செப்பேட்டில் ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது.

# பாவேந்தரின் 'இளைஞர் இலக்கியம்'

முனைவர் நெல்லை.
**ந. சொக்கலிங்கம்**
மதுரை.

## தோரணவாயில்

தமிழ்க்காப்புணர்ச்சியை இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மக்களிடம் எடுத்துச் சொன்ன பெருமைக்குரியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். தமிழில் பலதுறைகளில் தடம் பதித்துத் தமிழுக்கு அணிசெய்தவர் இவர். இவர் படைத்தவற்றுள் 'இளைஞர் இலக்கியமும்' ஒன்றாகும். இந்நூல் 1953-ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளிவந்தது. 1967-இல் நான்காம் பதிப்பைக் கண்டது. இந்நூலைக் குறித்த கருத்துக்களைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாவேந்தரின் முன்னுரை

பாவேந்தர் ஓர் ஒப்பற்ற நோக்கத்தைக் களமாகக் கொண்டு 'இளைஞர் இலக்கியம்' நூலை இயற்றியுள்ளார். 'பிழைச்சொல்லின்றி மாணவர் பாட்டுக் கற்க வேண்டும் என்பதாகும்' என்றும், 'ஆங்கிலம் முதலிய பிற சொல்லால் வழங்கும் பொருளை ஏற்ற தமிழ்ச் சொல்லாலேயே குறித்திருக்கின்றேன். படிப்பார் நினைவிற் கொண்டு பயன் அடையட்டும் என்று' என்றும் கூறுவதனால் அவருடைய நோக்கம் நன்கு புலனாகும். இந்நூலில் வரும் பாடல்களில் அருஞ்சொற்களைப் பாவேந்தர் பயன்படுத்தியுள்ளார். மாணவர் நலன் கருதியே அவ்வருஞ் சொற்களைக் கலந்து பாடியுள்ளார். தமிழ், இயற்கை, அறிவு, ஊர்தி, தொழில், உயிர்கள், தாலாட்டும் துயில் எழுப்பும், சிரிப்பு, சிறுகதைப்பாட்டு என ஒன்பது தலைப்புகளில் 134 பாடல்களை இவர் பாடியுள்ளார். தமிழ் வாழ்த்திலே தொடங்கும் பாவேந்தர் தமிழ் வாழ்த்திலேயே முடிக்கின்றார். மொத்தத்தில் இந்நூலை இவர் ஐந்தாண்டுடைய சிறுவர் சிறுமியர் முதல் பல்கலைக் கழக மாணவர் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்னும் உயரிய நோக்கிலே இந்நூற்பாடல்களை இயற்றியுள்ளார்.

## சீரைத் தந்த தமிழ்

இளைஞர் இலக்கியத்தில் முதற்கண் வருவது 'தமிழ்' பற்றியது. முத்தமிழ் குறித்து இவர் விளக்கம் தருகின்றார். இதோ அப்பாடல் அடிகள்:

"படிப்பும் பேச்சும் இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்

நடிப்பும் கூத்தும் சேர்ந்ததே
நாடகத் தமிழ் என்பார்கள்." (பா. 8)

தமிழின் இனிமை பற்றிப் பாவேந்தர்,

"காம்பில் மணக்கும் மல்லிகை காதில் மணக்கும் தமிழ்மொழி" (ப. 9) என்கிறார். சமுதாய முன்னேற்றம் கருதிப் பாடல்கள் பல இயற்றிய பாவேந்தர். இந்நூலில் சமுதாயக் குறைகள் தீர வழி கூறுகின்றார் இதோ:

"குறைகள் தீர முயல்வதெப்படி?
கூட்ட மக்கள் கிளர்ச்சி வேண்டும்
கறைகள் போகா திருப்ப தென்ன?
கட்டாயக் கல்வி கிட்டாமை தான்" (பா. 10)

விலங்குகளும் பறவையினங்களும் கூடத் தமிழை விரும்பிக் கேட்டு மகிழ்கின்றன என்று பாவேந்தர் குறிப்பிடுகின்றார்.

## இயற்கை எழில்

'நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை!' எனப் பாடி மகிழ்ந்த பாவேந்தர் இளைஞர் இலக்கியத்தில் மழை, கோடை, குளம், குட்டை, தாமரைக்குளம், ஏரி, ஆறு எனப் பற்பல நீர்நிலைகளைச் சொல்லி அவற்றின் இயற்கை எழிலில் தன்னை இழந்துவிடுகின்றார்.

மலை பற்றிப் பாடும் போது பாவேந்தர்,

'மண்மேல் உட்கார்ந்த மலையே - நெடு
வானத்தில் இருக்கும் உன்தலையே" (பா. 29)

என்று கூறி நம்மையும் வானத்தை அண்ணாந்து பார்க்க வைக்கின்றார். கடற்கரையில் சுண்டல் விற்பவனையும் பாவேந்தர் ஒரு பாட்டுக்குள் பதிவு செய்துள்ளார்.

நிலவைப் பற்றிய பாட்டு மிக அருமை. நிலவைப் பற்றி இலக்கிய நயந்தோன்ற, 'உலக விளக்கு' (பா.32) என்றும், 'வில்லேதான் மூன்றாம் பிறை' (பா. 36) என்று உவமை கூறி விளக்குதல் பாவேந்தரின் புதுமை வேட்கையை வெளிப்படுத்துகின்றது. ஆங்காங்கே பாவேந்தர் ஆங்கிலச் சொற்களுக்கு அவரே தமிழில் மொழிபெயர்த்துக் கூறுவது போற்றத்தக்க ஒன்று என்பதற்கு, 'பொறியியங்கி' என்கிறார். பாவேந்தர் பட்டணம் குறித்துப் பாடியுள்ள பாடல் அங்கதச்சுவையுடைய பாடலாகும்.

"பல்கலைக் கழகம்
உயர்நிலைப் பள்ளி
செல்வச் சிறுவர்
செல்லும் பள்ளிகள்

நல்ல நூல்கள்
படிக்கப் படிப்பகம்
எல்லாம் இருக்கும்
அமைதி இராது" (பா. 42)

முக்கனிகளைப் பாவேந்தர் விளக்கும் பாங்கு இதோ :

"குண்டுபலா குலைவாழை
மண்டுசுவை மாம்பழங்கள்
கொண்ட மூன்றும் 'முக்கனி' யாம்
உண்டு மகிழ்வர் தமிழர்." (பா. 45)

## அறிவுரை கூறுதல்

பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சில் நல்லறக் கருத்துக்களைப் பதிய வைக்கும் முயற்சியில் பாவேந்தர் இப்பகுதியில் வெற்றி பெற்றுள்ளார் என்று கூறலாம். அவர் 'நேர்பட ஒழுகு' என்னும் தலைப்பில் 8 பாடல்கள் பாடியுள்ளார். ஔவையின் அடிச்சுவட்டில் எளிமைநயம் தோன்றுமாறு இப்பாடல்களைப் பாடியுள்ளார்.

"கடன் வாங்கக் கூடாது தம்பி-மிகக்
கருத்தாய்ச் செலவிட வேண்டும்
உடம்பினைக் காப்பாற்ற வேண்டும்
உணவினில் நல்லுணவை உண்பாய்..." (பா. 54)

என்று சின்னக்குழந்தைகளுக்கு வாழ்வியல் நெறிமுறைக் கூறி நெறிப்படுத்துகின்றார்.

"தீமையான செய்கைகளைச்
செய்யக் கூடாது
செய்வோரிடம் எப்போதும்
சேரவும் கூடாது" (பா. 59)

என்று நல்ல பழக்கங்களை நயந்தோன்ற நவில்வதும் நம்கருத்தைக் கவர்வதாகும். எண்களைப் பயிற்றுவிக்கும் பாடல் ஒன்று :

"வேலா எவர்க்கும் தலைஒன்று மெய்யாய் எவர்க்கும் கண் இரண்டு
சூலத்தின் முனையே மூன்று துடுக்குநாயின்கால் நான்கு
வேலா உன்கை விரல்ஐந்து மின்னும் வண்டின் கால்ஆறு
வேலா ஒருகைவிர லுக்கு மேலே இரண்டுவிரல் ஏழு". (பா. 63)

இதே போன்று நாற்றிசை பற்றிக் கூறும் போது இந்தியநாட்டு எல்லை கூறுகின்றார் பாவேந்தர். உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எனப் பாடம் சொல்லும் போக்கில் இவர் பாடல்கள் பல புனைந்துள்ளார்.

## அணிவகுக்கும் ஊர்திகள்

ஊர்திகளின் இயக்கம் பற்றியும் அவற்றின் பயன்கள் குறித்தும் பாவேந்தர் பக்குவமாய்ப் பகர்வார். மாட்டுவண்டி தொடங்கிப் பரிசல், கப்பல், புகைவண்டி வரை எல்லா ஊர்திகளையும் குறித்துப் பாடியுள்ளார்.

" பொறி மிதிவண்டி
படபட என்று
போவதைப் பாருங்கள்
குறுகிய இடத்தில்
ஒருவர் உட்கார்ந்து
போவதைப் பாருங்கள் (பா. 79)

என்று சிறுவர்களின் கண்முன் (Motor Cycle) பொறிமிதி வண்டியை இயக்கிக் காட்டுவார். Guard என்பதற்குக் கண்காணி என்று தமிழாக்கம் செய்துள்ளார். இவ்வாறு ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழாக்கமும் தந்து இவர் விளக்குவது இவருடைய தமிழாக்கச் சிந்தனையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

## தொழில்

தொழிலாளர் நலனில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் காட்டியவர் பாரதிதாசன் என்பது இவருடைய படைப்புகளில் விரிவாகக் காணலாகும். இத்தலைப்பில் இவர் குயவர், தட்டார், கொத்தனார், கருமார், தச்சர் எனப் பல தொழிலாளர்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

'இலை தைத்தல்' பற்றிப் பாவேந்தர் கூறும் பாடல் வருமாறு :

"வேலை யில்லா நேரம் வீட்டில் உள்ளோர் யாரும்
ஆலிலையைத் தைப்பார் அதைக் கடையில் விற்பார்
மூலையிலே குந்தி இருப்பவளோர் மந்தி
வேலை செய்யும் பெண்கள் வீட்டின் இரு கண்கள்" (பா. 96)

என்று இவர் பெண்களின் முயற்சிகளைப் போற்றுகிறார். பணிசெய்வோர் பலரையும் - குடை பழுது பார்ப்போர், சாணை பிடிப்போர் இப்படிப் பலரையும் - அவர் செய்கின்ற தொழிலையும் போற்றிப் பாடியுள்ளார். இவர்,

"சிரிப்பதுண்டு
மண்பாண் டத்தைச்
சிறுமை என்று
நினைப்பதுண்டு
பெருத்த நன்மை
மண்பாண்டத்தால்
சமையல் செய்து
சாப்பிடு வதனால்" (பா. 90)

என்று நம் மரபு வழிச் சமையற்கலையைப் போற்றியுள்ளார்.

## உயிர்களின் இயல்பு

நாய்வளர்த்தல், பசுப்பயன், வண்டு, பறவைகள், கோழிவளர்த்தல், கிளிவளர்த்தல், சிட்டுக்குருவி, காக்கை எனப் பல உயிரினங்களைப் பாடிப் பரவுவார் பாவேந்தர். எலிப்பொறி பற்றிப் பாவேந்தர்,

"எலிப் பொறியில் போளி - அதை
இழுத்தது பெருச் சாளி
எலிப்பொறியின் கதவு தான்
சாற்றிக் கொண்டது பிறகு
ஒளிந்தது பார் உள்ளே - அது
வரப்பார்த்தது வெளியே
வலியக் கோணியில் பிடித்தார் - அதை
மாண்டு போக அடித்தார்" (பா. 115)

என்று அன்றாடம் நாம் காணும் காட்சியைக் கவிதைக்குள் காட்டி நம் கருத்தைக் கவர்ந்து விடுகிறார்.

### தாலாட்டும் துயிலெழுப்பும்

பாரதியார் நாட்டுமக்கள் உரிமையிழந்து தவித்தமை கருதித் தாலாட்டு பாடவில்லை. ஆனால் பாரதிதாசனோ தாலாட்டின் வாயிலாகத் தமிழ்க் குழந்தைகளை விழிப்புற்று எழச் செய்தார். ஆண், பெண், பொதுத்தாலாட்டுகள் பாடியுள்ளார், பள்ளி எழுச்சியும் பாடியுள்ளார். (ஆண், பெண்), தட்டாங்கி, கைவீசல் போன்ற பல சிற்றிலக்கிய வகைகளையும் பாடியுள்ளார்.

"தட்டாங்கி தட்டாங்கி
தலைமேலே தாழம்பு
பட்டாலே சட்டை
பஞ்சாலே சல்லடம்
செட்டாக அணிந்து
சீராக முந்தி
தட்டுநீ தட்டு
தட்டாங்கி தட்டாங்கி" (பா. 123)

என்று சிறுகுழந்தைகளுக்குப் பாடிப் பாவேந்தர் பரவசம் ஊட்டுகிறார். மேலும் சிரிப்பு என்ற தலைப்பில் 5 பாடல்களும், சிறுகதைப்பாட்டு என 9 பாடல்களையும் பாரதிதாசன் இயற்றி 'இளைஞர் இலக்கிய'த்தைப் படைத்துள்ளார்.

## முடிவுரை

இயல்பான தமிழில் ஏற்றம் மிக்க சீர்திருத்த உணர்வுடைய பல பாடல்களைப் பாடியுள்ள பாவேந்தர், இளைஞர்களுக்கும் எளிய-இனிய தமிழில் பாட இயலும் என்பதனை இந்நூல் இயற்றி வெற்றி பெற்றுள்ளார். இப்பாடல்கள் கீழ்வகுப்புப் படிக்கும் இளம்சிறார்க்கும் சிறுமியர்க்கும் கற்பிக்கப்படல் வேண்டும். விரைவில் இதுசெயலுக்கு வருமானால் அது பாரதிதாசனுக்குச் செய்யும் சிறப்பாகும்.

# வாசகர் வாசகம் (1)

*மதிப்பிற்சிறந்த செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர், வணக்கம்.*

விளம்பரமில்லாத 40பக்கத் தமிழமுதை, வண்ணமிகு தரத்தாள் அட்டையாம் கொள்கலத்தில் ஏந்தி, வீட்டுநூலகத் தொகுப்பிற்குப் புதிய சேர்கை என சூன் 2014 இதழ் கிடைத்தது; நன்றி; வாழ்த்துக்கள். தரமான ஆய்வுக்கட்டுரைகளை வரவேற்கும் ஆசிரியரின் அறிவிப்பு, மனத்தை ஈர்க்கின்றது. வாழ்த்துப் படச்செய்தி, ஏழுகட்டுரைகள் நன்று.

நனைகவுளுக்கு, அகம், கலி, திருக்குறள் சான்றுகளைக் கட்டுரையாளர் அழகாகக் தந்துள்ளார். கோயில் வரலாறு வழிபாடு விளக்கும் கட்டுரையில் புறப்பா, இரட்டைக் காப்பியங்கள், பெரும்பாண், நெடுநல்வாடை மேற்கோள்கள் அருமை! இணையதளம் போன்ற கட்டுரைகள், தமிழுக்கு அமையும் புத்தம்புதிய வழித்தடங்கள் ஆதலின், பயன்மிக்கவை!

முப்பத்திரண்டு உத்திகளை நன்னூலார் உரைத்தார். சூர்யகாந்தன் படைப்புகளில் உத்திகள் கட்டுரை, கருத்துப் புலப்பாடு, பாடல், எடுத்துரை, வினாவிடை, உரையாடல், குறியீடு பின்னோக்கு ஆகிய உத்திகளை அழகுததும்ப முன்வைக்கிறது. திருத்தொண்டு விளக்கமாக அமைந்த பத்துப்பக்க கட்டுரை, ஒருபுதினத்தின் விறுவிறுப்பை மகுடமாக அணிந்து கொண்டது எனில், மிகையன்று! புதிய முயற்சி!

உரைவானில் முழுநிலா இளம்பூரணர் உரையை பொருளதிகார நோக்கில் வியக்கும் கட்டுரை, மிகஅருமை தமிழண்ணலின் கருத்தைப் பகிர்ந்தளிக்கும் முன்னுரை முதல், 'இளம்பூரணர் ஓர் உரை வித்தகர்' என நிறைவு செய்யும்வரை கருத்துகள் தலைப்பிற்கு அரண் செய்கின்றன. அகம், புறம்; முதல், கரு, உரி; பரி. வாழ்த்துப்பா கிடைத்த பேறு; இன்னபிற கருத்துக்கள் நிரலாக உள. 1. அகத்தியம் 2. காக்கைப்பாடினியம் 3. செயிற்றியம் 4. பரிமாணச் சூத்திரம் 5. பன்னிரு படலம் ஆகியவற்றை எடுத்தாண்ட செய்தியை முன்வைப்பதன் மூலமாக, அந்நூல்கள் அவர்காலத்தில் கிடைத்தன என்னும் நுட்பம் உணர்த்தப்படுகிறது!

'தமிழரின் மறுமைக் கோட்பாடு' என்னும் ஆறு பக்கக் கட்டுரை, முனைவர் திரு கு. வெ. பாலசுப்பிரமணியன் அவர்களின் "மூன்றாவது கோட்பாடு" ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பெனக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். சங்கத்தமிழ் தனித்துவச்சிறப்பு நன்கு விளக்கம் பெற்றுள்ளது. இருமை, ஊழ், புகழ், வினை – நல்ல அலசல்; தேற்றம்: பிறப்பின் பயன் புகழே!

பதிப்பித்த மதுரைத்தமிழ்சங்கம், பதிப்பாசிரியர், படைப்பாளர்கள், சிறப்பாக அச்சிட்டுத் தந்தோர், 100% பாராட்டுக்கும், நல்வாழ்த்துகளுக்கும் உரியோர். அன்பு ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்புடன், புலவர் சி. **பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# மணிமேகலையில் சமயப்பொறை

பா. ஆடலரசு
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

## முன்னுரை

பௌத்த சமயக் காப்பியமாகக் கருதப்படுவது மணிமேகலை. இக்காப்பியம் பௌத்த சமயக் கருத்துக்களையே உயர்வுபடுத்திக் கூறினும், பிற சமயக் கருத்துக்களையும் எடுத்துக்கூறி, அச்சமயத்தைப் பற்றி விளக்குவதால் சமயப்பொறை தன்மை மணிமேகலையில் உள்ளது என்பதை எடுத்தியம்புவதே இதன் நோக்கமாகும்.

## சமயம் - சமயப்பொறை

சமயம் என்பது மக்களை நெறிப்படுத்தும் வழிகாட்டியாகவும், வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகவும் இருந்தது. அவ்வகையில் மக்களின் நம்பிக்கை என்பதை அடிப்படையாகக் கொண்டு அதனையே மையமிட்டுக் கட்டப்படும் ஒருவகைத் தெய்வநல மாளிகையே சமயமாக வரையறுக்கப்பட்டது. சமயப்பொறை என்பது குறிப்பிட்ட சமயத்தின் மீது அளப்பறிய பற்றுக் கொண்டிருப்பினும் பிற மதக்கடவுளர்களையும், கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையே சமயப்பொதுமை அல்லது சமயப்பொறை எனப்பட்டது.

## வைணவம்

விட்ணுவை முதன்மையாகக் கொண்டு வழிபடுதலால் இச்சமயம் வைணவம் எனப் பெயர் பெற்றது. இவ்விட்னுவை வழிபடுபவர்கள் வைணவராவர். மணிமேகலையில் வைணவவாதி வாயிலாகத் திருமாலின் பெருமையைச் சாத்தனார் கூறியுள்ளதை,

காதல் கொண்டு கடல்வணன் புராணம்
ஓதின னாரணான் காப்பியன் னுரைத்தனன்

எனும் அடிகளால் அறியமுடிகிறது. மேலும்,

சிந்தபு சின்னீ ரைம்படை நனைப்ப

எனும் திருமாலின் பெருமையை விளக்கும் வண்ணம் குறிப்பிட்டிருக்கிறார்.

## சைவம்

சிவனை முதன்மையாகக் கொண்டு விளங்குவது சைவம். சிவபெருமானைப் பின்பற்றுபவர்களைச் சைவர்கள் என்று அழைப்பர்.

மணிமேகலை இயற்றப்பட்ட காலத்தில் காவிரிப்பூம்பட்டிணம் முதலாகத் தமிழ்நாட்டிலுள்ள பேரூர்களிலும் சிற்றூர்களிலும் நிலவிய தெய்வ வழிபாடுகள் எல்லாவற்றுள்ளும் நுதல்விழி நாட்டத்து இறைவனாகிய சிவபெருமானைப் பரவிப் போற்றும் சிவவழிபாடே முதன்மை பெற்றிருந்ததை மணிமேகலை,

நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆற்றி மரபி னறிந்தோர் செய்யுமின்

என்றவாறு குறிப்பிட்டுள்ளது.

## சமணம்

சமண சமயத்தின் இரு பிரிவுகளாக ஆசிசீவகச் சமயமும், நிகண்ட சமயமும் விளங்குகின்றன. சமணத்தைச் சார்ந்தது என்றாலும் இவ்விரு சமயங்களுக்குள்ளும் பல்வேறுபட்ட தத்துவங்கள் காணக் கிடைக்கின்றன. இவற்றை ஆசீவகவாதியின் வாயிலாகவும், நிகண்டவாதியின் வாயிலாகவும் மணிமேகலை கேட்டறிவதாக இக்காப்பியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### அ) ஆசீவகச் சமயம்

இச்சமயத்தைத் தோற்றுவித்தவர் மற்கலீயாவார். "மற்கலி நூலின் வகை" என்று மணிமேகலை குறிப்பிடுவதும் இதனை மெய்ப்பிக்கும். "ஆசீவகச் சமயம் முற்காலத்துச் சமதண்டம் என்ற பெயருள்ள ஒரூரில் பரவியிருந்ததென்று நீலகேசியால்" தெரிகின்றது. மணிமேகலையில் ஆசீவகவாதி தமது சமயம் பற்றி கூறும்போது,

வரம்பி லறிவ னிறைநூற் பொருள்களைந்
துரந்தரு முயிரோ டொருநால் வகையனு

என்னும் அடிகள் எல்லை இல்லாதனவான பொருள்களில் எங்கும் எப்பொழுதும் நீங்காமற் பொருந்திக் கிடந்து தோன்றுகின்ற அநந்த ஞானிகளாகிய மற்கலி தேவனே எமது கடவுள். எங்கள் நூற்பொருள் ஐந்து வகைப்படும். அஃதாவது உயிரும் நால்வகை அணுக்களுமாகும் என்று கூறியுள்ளதோடு, ஆசீவகச் சமயம் பற்றிய தெளிவைத் தருகிறது. இதற்கு வலுசேர்ப்பதாகவும், இதனை மேலும் உண்மைத் தன்மையாக்குவதற்கும் கீழே குறிப்பிடப் பெறும் நீலகேசி பாடல் துணைபுரிகின்றது.

என்றலு மற்கலி தானே யிறையினி
யொன்பது வாங்கதிர் நூல்யா முடையன
மன்பெறு நுண்பெரு ளைந்தியல்

## ஆ) நிகண்ட சமயம்

நிகண்ட சமயத்தைத் தோற்றுவித்தவர் வர்த்தமான மகாவீரர். திகம்பரசமணர் என்றழைக்கும் சமணர் இவ்வகையைச் சார்வர். "கண்டம் - உடை : நிகண்டம் - உடையின்மை : எனவே ஆடையற்ற சமணர்களை இச்சொல் புலப்படுத்துகிறது'' மணிமேகலையில் நிகண்டவாதி தமது சமயம் பற்றி கூறும்போது,

இந்திரர் தொழப்படு மிறைவனெம் மிறைவன்
தந்த நூற்பொரு டன்மாத்தி காயமு
மதன் மாத்தி காயமுங் காலா காயமும்
தீதில் சிவனும் பரமா ணுக்களும்
நல்வினை யுந்தீ வினையுமவ் வினையாற்
செய்வுறு பந்தமும் வீடுமித் திறந்த
ஆன்ற பொருடன் நன்மைய தாயும்
தோன்றுசார் வொன்றின் றன்மைய தாயும்
அநித்தமு நித்தமு மாகி நின்று"

என்னும் அடிகள், இந்திரர்களால் தொழப்படுகின்ற தலைவனாகிய அருகனே எங்கள் இறைவனாவான். தன்மாத்தி காயமும், காலமும், ஆகாயமும், குற்றமற்ற சீவனும், பரமாணுக்களும், நல்வினையும், தீவினையும், அவ்வினையால் செய்தலைப் பெறுகின்ற கட்டும் வீடும் போன்ற இருபது கூறுகளை நூற்பொருள்கள் கொண்டதான நிகண்டசமயம் பற்றி கூறப்படுகிறது.

## வைசேடிகம்

தருக்கம் என்னும் நியாயவாதத்தின் ஒரு பிரிவு வைசேடிகமாகும். வேத கருத்துக்களை ஏற்றாலும், தனக்கென ஒரு சிந்தனையும் தத்துவங்களையும் கொண்டது. இச்சமயத்தை ஏற்படுத்தியவர் கணாதர் என்பவராவார். வைசேடிகர் பொருள்களை ஏழுவகைப்படுத்துவர். அவற்றில் ஒன்று திரவம் (பொருள்) என்பதாகும். திரவியம் என்பது உயிர்ப் பொருள்களும், உயிரியல் பொருள்களுமாகிய அனைத்தையும் தன்னுள் அடக்கி இருப்பதாகும். அவை நிலம், தீ, நீர், வளி, வான், காலம், திசை, உயிர், மனம் என்பன. இக்கருத்தை மணிமேகலை,

..............................அப்பொரு ளொன்பான்
ஞாலநீர் தீ வளி யாகா யாந்திசை
கால மான்மா மனம்............................"

என்று குறிப்பிடுகிறது. மேலும் தொடர்ந்து பிற ஆறு பொருள்வகைகளையும் மணிமேலையில் இருந்து அறியமுடிகிறது.

## நியாயம்

நியாயம் என்பதனை நைநாயிகம் என்றும் கூறுவர். நியாயம் என்ற சொல் நய என்ற வேர்ச் சொல்லின் அடியாய்த் தோன்றியது. மெய்ப்பொருள் முடிவிற்கு உய்க்கும் வழிகளை ஆராயும் அறிவியற்கலை நியாய தத்துவம் ஆகும். இது உயர்ந்த தர்க்க ஞானத்தினால் ஆராயப்பெற்ற உண்மை-களைக் கூறுவது.

நியாயத் தத்துவம் உலகிலுள்ள பொருள்கள் யாவும் உண்மை என்று கூறும். இத்தத்துவம் அடங்கிய நைநாயிக நூலைச் செய்தவர் அக்கபாதன் என்னும் முனிவர். இவர் பெயரை மணிமேகலை,

அக்க பாதன் கணாதன் சைமினி (மணி : 27 : 82)

என்னும் அடியின் மூலம் அறியப்படுகிறது. நியாயகத்தின் கருத்துக்கள் பிரத்தியக்கம், அனுமானம், ஆகமம் என்னும் மூன்றனோடு உவமானமும் சேர்ந்தது என்பதனை,

மெய்ப்பிரத் தியமனு மானஞ் சாத்தம்
உவமான மருத்தா பத்தி யபாவம்

என்னும் அடிகளின் வழி அறியமுடிகிறது.

## உலகாயதம்

உலகம் மட்டுமே உள்பொருள் எனக் கொண்டதால் இக்கொள்கைக்கு உலகாயதம் என்று பெயர். "சர்வாகரரால் முதன் முதல் தோற்றுவிக்கப்பட்டுமையின் சார்வாகம் என்ற பெயரும் உண்டு என்பர் கு. சுந்தரமூர்த்தி". இவ்வுலகில் விளைவுகள் அனைத்தும் நான்கு பதங்களால் ஆனது என்னும் கொள்கையால் இவர்களைப் பூதவாதி என்றும் அழைப்பர். இதனை,

பூதவாதியைப் புகனீ யென்ன

என்று மணிமேலை கூறுகிறது. ஆகவே மணிமேகலையில் உலகாயதம் இடம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

## சாங்கியம்

வைதிக சமய தத்துவங்களுள் - தரிசனங்களுள் மிகவும் தொன்மையானது சாங்கியமாகும். இந்தத் தத்துவத்தை முறைப்படுத்தி முதலில் வெளியிட்டவர் கபிலர் என்பதனை,

தாம்பிரு கற்பதி சினனே கபிலன்

என்று மணிமேலை குறிப்பிடுகின்றது. சாங்கியம் பிரகிருதி, புருடன் என்னும் இரு தத்துவக் கருத்துக்களைக் கொண்டது. பிரகிருதி தத்துவம்

எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு ஒரு மூலக்காரணம் வேண்டும் என்பதாகும். புருடதத்துவம் என்பது அறிவுடைய பொருள் மாற்றம் அடையாதது என்பதாகும்.

"பிரகிருதியின் படைப்புகளான தற்காலிகப் பொருள்கள் அழியினும் இவற்றை அறிவதற்கு அறிவுடைய பொருள் தேவைப்படுகிறது". இக்கருத்தை மணிமேலையில்,

அறிதற் கெளிதாய் முக்குண மன்றிப்
பொறியுணர் விக்கும் பொதுவு மன்றி
எப்பொரு ளுந்தோன் றுதற்கிட மன்றி
அப்பொரு ளெல்லா மறிந்திடற் குணர்வாய்
ஒன்றா யெங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்

என்னும் அடிகளால் சாங்கியக் கோட்பாடுகள் சரியான முறையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

## பிரமவாதம்

பிரமவாதி தமது சமயத்தைப் பற்றி மணிமேகலையில், பெரியதான இந்த உலகமெல்லாம் ஒப்பற்றவனாகிய பிரமதேவன் இட்ட அண்டமாகும் என்று பிரமவாதி தன் சமயக் கருத்தைக் கூறியுள்ளார். இதனை,

பேருல கெல்லாம் பிரம வாதியோர்
தேவ னிட்ட முட்டை யென்றான்

என்னும் மணிமேகலை அடிகள் விளக்குகின்றன. இதன் வழி பிரமவாதம் இடம் பெற்றுள்ளது அறியப்படுகின்றது.

## வேதவாதம்

மணிமேகலையில் வேதவாதத்தின் நெறிகள் அச்சமய வேதவாதியால் எடுத்துரைக்கப்படுகின்றது. "கற்பகம் என்பதான வேதங்களின் ஆறங்கமுமே கைகளாகவும், சந்தமே கால்களாகவும், பண்களே கண்களாகவும், தெற்றென விளக்கம் செய்யும் நிருத்தம் என்பதே செவிகளாகவும், சிக்கையே மூக்காகவும், இவற்றோடு பொருந்தும் சொல் இலக்கணமாகிய வியாகரணமே முகமாகவும் பெற்று, யாதொரு பற்றுதலற்ற புருடனுக்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை, அவ்வேதங்கள் உரைப்பதே எங்கள் நெறியாகும் என்று வேதவாதியால் கூறப்படுவதனை,

கற்பங் கைசந் தங்கா லெண்கண்
டெற்றே னிருத்தஞ் செவிசிக் கைமுக்

குற்ற வியாகர ணமும் பெற்றுச்
சார்பிற் றோன்றா வாரண வேதக்
காதி யந்த மில்லையது நெறியெனும்
வேதிய னுரையின் விதியுங் கேட்டு

என்னும் அடிகளால் வேதவாதம் மணிமேகலையில் உள்ளதை உணர முடிகிறது.

**முடிவுரை**

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த சமயம் பற்றி கூறினும் பிறசமயக் கருத்துக்களையும் தனது சமயக் கருத்துக்களைப் போல் கூறியுள்ளது. அவ்வகையில் சைவம், வைணவம், சமணம், வைசேடிகம், நியாயம், உலகாயதம், சாங்கியம், பிரமவாதம், வேதவாதம் போன்ற சமயப் பிரிவுகளையும் எடுத்துக் கூறியுள்ளதால் மணிமேகலை காப்பியத்தில் சமயப்பொறைத்தன்மை உள்ளதை அறிய முடிகிறது.

பல் சமயக் கருத்துக்களை அறிந்திடுவோம்!
*சமயப்பொறைதனை வளர்த்திடுவோம்!*

## வாசகர் வாசகம் ②

அன்புடையீர்! வணக்கம்.

சூலை 2014 செந்தமிழ் இதழ், முனைவர் தெ. முருகசாமி அவர்களின் பாவேந்தர் மறுபக்கம் என்ற ஆய்வுரையினை வெளியிட்டிருந்தது. அதில் பாரதிதாசன் 'கடவுளைத் தேடிய' இளமைப் பருவத்துப் பாடல்களைப் பற்றிய தகவல்கள் இடம் பெற்றிருந்தன. பாரதிதாசனுக்கு நம்மாழ்வார் தமிழுணர்விலும் இருந்த ஈடுபாட்டை அவை விளக்கின. பாரதிதாசனைத் செழுமைப்படுத்திய பக்தித் தமிழைத் தம்முடைய மகன் மன்னர் மன்னனுக்கும் கற்றுத் தரும்படி சொல்லிய தகவல் அருமையிலும் அருமை சான்றது.

பாரதியின் கவிதா மண்டலத்தில் பாரதிதாசனைச் சேர்த்துக் கொள்ளச் செய்த எங்கெங்கு காணினும் சக்தியடா பாட்டுத் தோன்றிய பின்னணியை ஆய்வாளர் நறுக்காகச் சுட்டியுள்ளார்.

ஆன்மிகத்தில் தோன்றி அதிலேயே தம் கவிதைப் பயணத்தைத் தொடராமல், நாத்திகப் புரட்சியில் தடம்பதித்துத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு நிலைத்த புகழ்பெற்ற பாரதிதாசனின் தனித்தன்மையை நேர்த்தியாகப் பதிவுசெய்துள்ள முனைவர் தெ. முருகசாமி வாழ்க வளமுடன்.

அன்புள்ள, **இ.கி. இராமசாமி**

# வளாகச் செய்திகள்

தாய்த்தமிழின் வளர்ச்சிக்காகவும், தமிழ்பயிலும் மாணவர்களின் நலனுக்காகவும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தில் பல்வேறு அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அறக்கட்டளைகளின் சார்பாகச் சொற்பொழிவுகளும் மாணவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கப்படுவது மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் செயல்பாடுகளுள் ஒன்றாகும். 25.07.14 அன்று செந்தமிழ் பத்திராதிபர் மகாவித்வான் மு. இராகவையங்கார் நினைவு அறக்கட்டளை சார்பாக, "மு.இராகவையங்காரின் இலக்கியத்திறன்" என்ற பொருண்மையில் சொற்பொழிவு நடைபெற்றது. மதுரைக்கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் தா.கு. சுப்பிரமணியன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவிற்குத் தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு. இரா.அழகுமலை அவர்கள் தலைமையேற்றார். செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்கள். செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். செந்தமிழ்க்கல்லூரியின் முதல்வர் மு.மீனா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். உதவிப் பேராசிரியர் திரு. மு. செந்தில்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் கோ. சுப்புலெட்சுமி அவர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்கள்.

ஏக்தா மகளிர் அமைப்பின் சார்பாகப் பெண் முன்னேற்றம், சமஉரிமை வழங்கல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. செந்தமிழ்க் கல்லூரி இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பாக 28.07.14 அன்று முற்பகலில் உணவே மருந்து என்னும் கருத்தரங்கம் செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் தலைமையிலும் தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு. இரா.அழகுமலை அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. இயற்கை மருத்துவர் திரு. அ. உமர் பாரூக் அவர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

அன்று பிற்பகலில் படைப்பாளர்களுடன் சந்திப்பு என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம், தேனி மாவட்டச் செயலாளர் திரு. அ. உமர்பாரூக் அவர்களும், எழுத்தாளர் திரு. தேனி சீருடையான் அவர்களும் இலக்கியம் படைப்போம் என்ற பொருளில் உரையாற்றினார். மாணவர்கள் படைப்பாளர்களுடன் கலந்துரையாடல் புரிந்து, தங்களது படைப்பார்வத்தை வளர்த்துக் கொண்டார்.

செந்தமிழ்க்கல்லூரி பாண்டியன் நூலகத்தில் 01.08.2014 அன்று வாசகர் வட்டம் கல்லூரிச் செயலாளர் திருமிகு கோச்சடை இரா. குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "பட்டாம் பூச்சி" என்னும் மொழிபெயர்ப்பு நாவலை, பி.லிட்., இரண்டாமாண்டு மாணவர் செல்வன் க.அன்பரசு திறனாய்வு செய்தார். பி.லிட் இரண்டாமாண்டு மாணவி செல்வி ப. பிரியங்கா நன்றியுரை வழங்கினார். இதில் முதல்வர், பேராசிரியர்கள், நூலகர், மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

15.08.2014 அன்று மதுரை கே.கே.நகர் அரிமா சங்கத்துடன் இணைந்து 68ஆவது சுதந்திர தினவிழா நடைபெற்றது. செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் கொடியேற்றிச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்விற்கு அரிமா. குருமூர்த்தி அவர்கள் தலைமையேற்க, தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. இரா.அழகுமலை அவர்களும், அரிமா. சந்தோஷ் குமார் அவர்களும் முன்னிலை வகித்தார்கள். சுதந்திர தினவிழா பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற பூபதிராஜ், ஜெயலட்சுமி, சபரி சுப்பிரமணியன் ஆகியோருக்கு திரு. சு. வீரணசாமி, திரு. க. முத்தையா பசும்பொன், அரிமா சுப்பையா அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள். முனைவர் மு. மீனா அவர்கள் வரவேற்புரை நல்க, அரிமா வெள்ளையப்பன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். மாணவர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டுவதாக இந்நிகழ்வு நடைபெற்றது.

– முனைவர் **மு. மீனா**

# புறநானூற்றில் போரியல் கருவிகளில் முரசு

க. வீரப்பன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

## முன்னுரை

சமூகம் தொடக்கம் முதல் இன்று வரை வளர்ச்சி பெற்றதற்குப் பல்வகைக் கருவிகளும் காரணமாக அமைந்துள்ளன. மனித நாகரீக வளர்ச்சி வரலாற்றில் முதலில் அவனுக்குத் துணைபுரிந்திருப்பவை கருவிகள். இக்கருவிகள் இயற்கையாகவும் செயற்கையாகவும் அமைந்தன. கூர்மையான கற்களும் விலங்குகளின் கொம்புகளும் இயற்கைக் கருவியாக அமைந்தன. செயற்கைக் கருவிகள் என்பது உலோகங்களால் செய்யப்பட்டவற்றைக் குறிக்கும். முதன் முதலில் வேட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்திய கருவிகள் காலப்போக்கில் போருக்கும் பயன்படுத்தினர். அப்படிப் பயன்படுத்தப்பட்ட கருவிகள், தமிழரின் வரலாற்றுக் களஞ்சியமான 'சங்க இலக்கியத்தில்' பல இடங்களில் காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் புறச்சிறப்புப் பெற்ற நூலாக விளங்குவது 'புறநானூறு' ஆகும். இதில் தமிழரின் நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், வீரம், கொடை, போர் என்னும் பல்வகையான நிகழ்வுகள் வெளிப்படுகின்றன. மேலும் தமிழர் வீரமிக்கவராக விளங்கியதால் மிக நுட்பமாகப் போரியல் சார்ந்த கருவிகளை உருவாக்கி கையாண்டுள்ளனர். அதனடிப்படையில் போருக்கு முதன்மையாக அறிவிக்கும் இசைக்கருவி-யாகவும், தகவல்களை அறிவிக்கும் கருவியாகவும் 'முரசு' பயன் பட்டுள்ளது. இம்முரசுப் பற்றி புறநானூற்றுப் பாடல்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

## போரியல் கருவிகள்

போர் புரியும் அரசர்கள் மற்றும் வீரமறவர்கள் பயன்படுத்தும் படைக் கருவிகளே போரியல் கருவிகள் ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

"படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெளிவுகொண் செங்கோல் அரசருக்கு உரிய" (தொல்.பொ.அகத்.நூற்.72)

எனும் நூற்பாவில்,

அரசத்தொழில் செய்வோருக்கு முக்கியமாகப் பயன்படும் கருவிகள் படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார் (மாலை), முடி, செங்கோல் ஆகியவையாகும் என்பார்.

முரசு பண்டையப் பெரும்பறை வகைகளுள் ஒன்றாக உள்ளது. பேரொலி எழுப்பும் இசைக்கருவிகளில் ஒன்று. இதன் சிறப்பைப் பாரதியார்,

"வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று கொட்டு முரசே"

என்று பாடலில் விளக்குகிறார். இப்பாடல் மூலம் முரசின் உயர்வை அறியமுடிகிறது.

## புறநானூற்றில் போரியல் கருவிகள்

பழந்தமிழர்களின் வீரத்தையும் போரியல் சார்ந்த கருவிகளையும் புறநானூற்றில் உற்று நோக்கும் போது வெண்குடை, முரசு, மணி, வாள், வீரக்கழல், அம்பு, கேடயம், முகக்கருவி (கறுழ்), தேர், வில், வில்லும் அம்பும், அம்பும் வேலும், கொடி, வேல், தண்ணுமை (முழவு), செங்கோல், கோடரி, தூங்கு எயில் (குண்டு வீச்சு விமானம் போல் சாதனம்), படைக்கருவிகள், வண்டி, பறை, ஆகுளி (சிறுபறை), பதலை, மாக்கிணை, சங்கு, துடி, மழு, ஏணி போன்ற கருவிகள் போரில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

அதனடிப்படையில் போரில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் முதன்மையானதாகவும் முரசு செயல்பட்டுள்ளது. இம்முரசின் பயன்பாடும் சிறப்பும் பற்றி கீழ்வரும் பகுதி விளக்குகிறது.

### முரசு

பழம்பெரும் தமிழ் இலக்கியங்களில் முரசு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. முரசு பற்றி பலர் பல்வேறு கருத்துக்களையும், வகைகளையும் கூறுகின்றனர். 'வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள்' என்னும் நூலில் வெ. நீலகண்டன் 'பெருமுரசு, சிறுமுரசு' என முரசை இருவகையாகக் கூறுகிறார். மேலும்,

"முரசு என்பது தோற்கருவி வகைசார்ந்த ஒரு தமிழர் இசைக்கருவி. இது அரைக்கோள வடிவுடையது. இது பெரிய இரும்புச் சட்டியில் மாட்டுத்தோலை வார்த்து உருவாக்கப்படும். பண்டைக்காலத்தில் அறிவிப்பு அல்லது தொடர் பாடல் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது பெருமுரசு.

சிறுமுரசு அல்லது சாயரட்சை மேளம் என்பது தோற்கருவி வகை சார்ந்த ஒரு தமிழர் இசைக்கருவி. இது சிறிய அரைச்சட்டியில் புள்ளிமான் தோல் கொண்டு வார்க்கப்பட்டது. இதனைக் கோயில்களில் மாலை வழிபாடுகள் முடிந்தும் இசைக்கப் பயன்படுத்தினர்" என விவரிக்கின்றார்.

'முரசு' இசைக் கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. இம்முரசினை விக்கிப்பீடியா கலைக்களஞ்சியம் வீர முரசு, தியாக முரசு, நியாய முரசு என மூன்றாகப் பகுத்து உரைக்கிறது.

- வீரமுரசு போருக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனைப் போருக்குச் செல்லும் முன்னும், போர் நடைபெறும் போதும், போர் முடிந்த பின்பும் கொட்டுதல் அக்கால வழக்கமாக இருந்துள்ளது.
- தியாக முரசு பொருள்களை அன்பளிப்பாக அளிக்க விரும்புபவர்களை வரவேற்க அமைக்கப்பட்ட முரசு ஆகும்.
- நியாய முரசு நீதி வழங்கும் காலங்களில் நியாயம் கேட்க விரும்புபவர்களை அழைக்கப் பயன்படுத்தப்பட்ட முரசு ஆகும்.

மேற்கூறிய கருத்துகளின் அடிப்படையில் 'முரசு' போரியல் கருவியில் முதன்மையானதாக உள்ளது எனலாம். அது மட்டும் இல்லாமல் இம்முரசு கோயில் விழா, நீதி வழங்குதல், அரசு சார்பான செய்திகளை அறிவித்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டாலும், பெரும்பாலும் முரசு போருக்குப் பயன்படுத்தப்பட்ட கருவியாகவே புறநானூற்றுப் பாடல்கள் பதிவு செய்கின்றன.

## புறநானூற்றில் முரசு

முரசு இசைக்குப் பயன்பட்டாலும், அது போருக்கும் வீரத்திற்கும் சிறப்புப் பெற்றது. இதை,

"ஏம முரசம் இழுமென முழங்க" (புறம்.3:3)

எனும் பாடல் அடியில் இரும்பிடர்த்தலையார், பாண்டியன் கருங்கை ஒள் வாட்பெரும் பெயர் வழுதியைப் போற்றி வாழ்த்தும் போது, காவலாகிய வீரமுரசம் இழுமென முழங்கும் ஓசையுடையதாய் இருக்கும் நிலையைக் கூறுகிறார். இதன் மூலம் முரசின் தன்மையும் சிறப்பும் வெளிப்பட முடிகிறது.

நாவலன் தீவு என்றழைக்கப்படும் குமரிக்கண்டத்தில் படை, கொடி, குடை எனப் பல சிறப்புகளுடன் வாழ்ந்தவன் சேர மன்னன். அச்சிறப்பு-

களில் போருக்கே உரிய கருவியாக இடி போன்று முழங்கக்கூடிய முரசினை வைத்திருந்ததைக் குறுங்கோழியூர்க் கிழார்,

"இடியென முழங்கும் முரசின்
வரையா ஈகைக் குடவர் கோவே" (புறம்.17:39-40)

என்னும் பாடல் அடிகளின் வாயிலாக விளக்குகிறார்.

மேற்கண்ட பாடல்கள் வழி வீரத்திற்கும் காவலுக்கும் போருக்கும் முரசு செயல்பட்டுள்ளது எனத் தெளிய முடிகிறது. மேலும் இடி போன்று ஒலிக்கக் கூடிய முரசினை மன்னர்கள் வைத்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## முரசு கைப்பற்றுதல்

முரசங்களைப் போரில் கைப்பற்றுவது பழந்தமிழர்களிடையே உயர்ந்த நிலையாக இருந்துள்ளது. அந்த வகையில் பாண்டிய மன்னன் போரில் இருபெரும் வேந்தர்களும் பகைவர்களும் அழியுமாறு போர் செய்கிறான். அப்போரில் வெற்றிப்பெற்று பகைவர்களுடைய வாராற் சேர்க்கப்பட்ட முரசங்களைக் கைப்பற்றுவதைக் கல்லாடனாரும், மருதனாரும் முறையே,

"பிணியுறு முரசம் கொண்ட காலை" (புறம். 25:7)
"உரைசெல முரசு வெளவி" (புறம். 26:7)

எனப் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் முரசங்களின் முக்கியத்-துவத்தையும் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது. இக்கருத்தினைப் புறம். 72:8-9 பாடல் அடிகளில் நெடுஞ்செழியன் போரின் தொடக்கத்திற்கு முன்பே "பகைநாட்டு முரசங்களைக் கைப்பற்றுவேன்" என்று சூளுரைப்பதைக் காணமுடிகிறது. இச்சூளுரையின் வாயிலாக அரசன் பகை நாட்டாரின் நிலம், பொன், பொருளைக் காட்டிலும் முரசங்களைக் கைப்பற்றுவதைக் குறிக்கோளாகக் கருதினான். இதன் மூலம் முரசங்களின் உயர்வை அறியமுடிகிறது. இப்படி முரசு கைப்பற்றுதல் பற்றி பல பாடல்கள் புறநானூற்றில் பதிவு செய்துள்ளன.

மேற்கூறிய கருத்துகளின் வாயிலாக முரசங்களின் தன்மையையும் மேன்மையையும் அறிய முடிகிறது.

## முரசுகளின் பயன்பாடுகள்

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் முரசைப் பயன்படுத்தியுள்ளான். அவற்றுள் கோயில் விழாக்களிலும் வழிபாடுகளிலும் முரசம் பயன்பட்டுள்ளன. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட

முரசு கோயில் முற்றத்தில் ஒலிக்கின்ற நிகழ்வை முதுகண்ணன் சாத்தனார்,

"முனிவில் முற்றத்து, இனிது முரசு இயம்ப" (புறம். 29:8)

எனும் அடியில் முரசின் நிலையினைத் தெளிவுபடுத்துகிறார்.

சேர, சோழ, பாண்டியர் என அழைக்கப்படும் மூவேந்தர் தமிழ்நாட்டின் சிறப்புமிக்கவர்கள். அவர்களுள் கிள்ளிவளவன் தமிழ் நிலத்தில் முரசு முழங்க தானைகளோடு புகழ்பெற்று விளங்கினான் என்பதை,

*"முரசு முழங்கு தானை மூவர் உள்ளும்"* (புறம். 35:4)

*எனும் பாடல் அடியில் வெள்ளைக்குடி நாகனார் விவரிக்கிறார்.* இப்பாடலில் கிள்ளிவளவன் முரசு முழங்கக் கூடிய சேனைகளைக் கொண்டதால், மூவேந்தர்களுள் சிறப்புடையவனாக விளங்கினான் என விளக்கப்பட்டுள்ளது.

சோழன் கிள்ளிவளவன் கருவூர் சேர மன்னன் மீது படையெடுத்துச் சென்று நெடுமதிலைச் சூழ்ந்திருக்கிறான். அப்போது அரண்மனையில் இருக்கும் சேரன் வெளியே வராமல் இருக்கிறான். அத்தகைய வீரமற்றவனுடன் முரசு முழங்க 'சோழா நீ போரிட்டால் *அது உனக்கு வெட்கத்தைத் தரும் செயலாகும்' அதனால்* நீ போரிடுவதும் போரிடாமல் இருப்பதும் நீயே முடிவு செய்க என ஆலத்தூர் கீழார் கூறுவார். இதை,

"ஆங்கு இனிது இருந்த வேந்தனொடு, ஈங்கு நின்
*சிலைத்தார் முரசம் கறங்க*
மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே' (புறம். 36:11-13)

என்ற அடிகளில் பதிவு செய்கிறார். இதிலிருந்து முரசு போரிட அழைக்கப்படுகின்ற கருவியாகவும் செயல்பட்டுள்ளது என்பது புலனாகும்.

மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் முரசு வழிபாடுகளுக்கும் போருக்கும் முக்கியக் கருவியாக அமைந்துள்ளது.

## முரசின் சிறப்புகள்

பண்டைக் காலத்தில் பாடப்பெற்ற புறநானூற்றுப் பாடல்கள் முரசின் சிறப்புகளைப் பதிவு செய்துள்ளன.

"மாசு அற ....... ......... .......... ..........
*குருதி வேட்கை உருகெழு முரசம்"* (புறம். 50:1-2)

எனும் பாடலில் *"முரசு"* என்று குறிப்பிடாமல் குருதி வேட்கை முரசு எனக்

குறிப்பதன் மூலம் முரசு "குருதி விருப்பமுடையது" எனப் பதிவு செய்கிறார் புலவர். இதன் மூலம் முரசு ஒலி என்பது போருக்குப் பயன்படுத்துவதையும், போரில் பல உயிர்கள் வெட்டுண்டு குருதி ஆறாக ஓடுவதையும் அறிய முடிகிறது. எனவே "முரசு" என்ற கருவி போரில் ஒலிக்கப்படும் கருவி என்பதையும், அதன் தன்மை "குருதி வேட்கை" உடையது என்பதையும் மோசிக்கீரனார் பாடல்வழி அறியலாம்.

உண்ண உணவும், உடுத்த உடையும், இருக்க இடமும் என்ற மூன்றும் மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாகும். ஆனால் பாண்டிய மன்னன் வளமிக்கக் காவிரி நாட்டை உடையவன். இவன் சிறப்புகளைக் கூறுகையில், முதலில் மனிதன் உயிர் வாழ்வதற்கு மிக முக்கியத் தேவையாக நீரும் நெல்லும் அமைகிறது. இரண்டாவது மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்ள அழகு சாதனமாகச் சந்தனமும் முத்தும் பயன்படுகிறது. இவ்விரண்டை அடுத்து குடி இருக்கும் இருப்பிடத்தைக் குறிப்பிடாமல் போருக்குரிய கருவியான முரசு கூறப்படுகின்றது. இதன் மூலம் முரசை மக்கள் வாழ்வோடு இணைத்து வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. ஆகவே, பாண்டிய மன்னன் போருக்குப் பயன்படுத்தக் கூடியனவாகப் பல்வேறு கருவிகள் இருந்தும், முழங்கும் தன்மை கொண்ட முரசினை வைத்திருந்தான் என்பதைப் புலவர்,

"நெல்லும் நீரும்........... ............... ..............
இமிழ் குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே" (புறம். 58:11-13)

எனும் இப்பாடல் அடிகளின் வாயிலாக முரசின் தன்மையினைக் காணமுடிகிறது.

பழங்காலத்தில் மன்னர்களுடைய வீரத்தைப் புகழ்ந்து பாடுகையில் பல வகையான கருவிகளை ஒப்புமைப்படுத்தி பாடும் வழக்கம் உள்ளது. இவை மட்டுமல்லாது வெற்றியைக் குறிக்கும் கருவியாக முரசைப் பயன்படுத்தியுள்ளனர். அந்த வகையில் சோழ மன்னன் வெற்றி முழக்கமிடும் முரசும், தப்பாத வாளும் உடையவன் என்று அவன் வீரத்தைப் புகழுகையில் குறிப்பிடுவர். அதனை,

"வலன் இரங்கு முரசின் வாய் வாள் வளவன்" (புறம்.60:10)

எனும் பாடல் அடியின் மூலம் அறிய முடிகிறது.

தமிழர் போர்புரியும் முறை உலக மக்களிடையே உள்ள முறையை விடச் சிறந்தது ஆகும். போர் முறையில் அறப்போர் செய்து வாழ்ந்துள்ளதால் இவ்வாறு கூறப்படுகிறது.

சேர, சோழ மன்னர்கள் அறப்போர் செய்து போர்க்களத்திலே வீரமரணம் அடைந்தனர். அக்களத்தில் பல்வேறு போர்க் கருவிகள் பயன்படுத்திய வீரர்கள் முரசையும் கையாண்டுள்ளனர். போர் முடிந்த நிலையில் மறவர்கள் முரசுகளுடன் வீழ்ந்து கிடப்பதைக் காட்சிப் படுத்துகிறார் புலவர். அதை,

"உரைசால் சிறப்பின் முரசு ஒழிந்தனவே" (புறம்.62:9)

என்னும் பாடல் குறிப்பிடுகின்றது.

சோழன், சேரன் ஆகிய இருபெரு வேந்தரும் போர்க்களத்தில் போர் புரிகின்றனர். அப்போரில் யானைப்படைகளும், குதிரைப்படைகளும் பயன்படுத்தப்பட்டு போரின் வன்மையால் இறந்தன. இவற்றுடன் வீரமறவர்களும் பெருஒலி எழுப்பக்கூடிய மயிர்சீவாமல் தோல் போர்க்கப்பட்ட முரசங்களை முழக்குவோரும் இறந்தனர். இதனால் இடிபோன்று ஒலிக்கும் முரசங்கள் போர்க்களத்தில் கிடக்கும் காட்சியைப் பரணர்,

"தோல் கண் மறைப்ப, ஒருங்கு மாய்ந்தனரே;
விசித்து வினை மாண்ட மயிர்க்கண் முரசம்" (புறம். 63:6-7)

எனும் பாடல் அடியின் மூலம் 'மயிர்க்கண் முரசம்' என்று முரசின் தன்மையினைக் குறிப்பிடுகிறார்.

அரசர்கள் போர் புரிகையில் பகைவர்கள் அவர்களிடம் தஞ்சம் அடைந்துவிட்டால், அவர்களுக்குச் சிறப்பு செய்யும் வழக்கம் இருந்துள்ளது. நலங்கிள்ளி பகைவரைப் போர்க்களத்தில் வருந்தும் அளவிற்குப் போர் செய்து வெல்லக்கூடியவன். இவனுக்குப் பகைவர்கள் தாழ்ந்து நின்றால் அவனது அரசுடன், சிறப்பு மிக்க முரசினையும் வழங்குவான் என்பதை,

"........... ........... ............ ............சீருடை
முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்" (புறம்.73:2-3)

எனும் பாடல் அடியின் வாயிலாக அறியமுடிகிறது. இக்கருத்தினைப் போன்றே நலங்கிள்ளியைப் பாடுகையில்,

"முரசுகெழு வேந்தர் அரசகெழு திருவே" (புறம். 75:12)

எனும் பாடல் அடியின் மூலம் அரச உரிமை தந்தை வழியின் மூலம் மகனாகப் பிறந்து அடையும் மரபாயினும் அவன் முரசினை முழக்கக் கூடிய திறமையினைப் பெற்றிருப்பது அவசியமாக உள்ளது. வீரனுடைய திறமை முரசை முழக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என்பதன் மூலம், முரசின் திண்மையினை அறிய முடிகிறது.

மேலும், அரச உரிமையினைப் பெறும் ஒருவன் போரை எதிர்க்கும் பொறுமையும், மன எழுச்சியும், வன் முயற்சியும் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இவற்றுடன் அரச செல்வங்கள் என வானோக்கிய வெண்குடையும் முரசும் கூறுவதில் முதன்மையானதாகக் கூறப்படுகிறது. 'முரசு' அரச செல்வங்களில், போர்க்கருவிகளில் உயர்வாகப் பேசப்படுகின்றது.

அதியமான் பேராற்றலுடன் போர்க்களத்தில் போர் புரிந்தான். அப்போரில் விழுப்புண் ஏற்பட்ட பகைவர்கள் தோற்றோடினர். அப்படிப்பட்ட போரில் திண்மையாகப் பிணிக்கப்பட்ட முரசம் இழுமென ஒலிக்கின்றது என்பதை ஔவையார்.

"திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்று ........ ........... ........... ............." (புறம்.93:1-2)

என்று பாடியுள்ளார். மேலும், மறவர்கள் போரை விரும்பி ஏற்று பெருஒலி எழுப்பக்கூடிய முரசினை முதலில் ஒலிப்பர் என்பதை,

"இமிழ்குரல் முரசின் எழுவரோடு முரணி" (புறம். 99.9)

என்ற பாடல் அடியின் மூலம் அறிய முடிகிறது. ஆகவே, வீரர்கள் முரசினை ஒலித்தே போரைத் தொடங்குவர் என்பது முரசின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்குகின்றது.

பாரி மலைவளம் மிக்க பறம்பு நாட்டை உடையவன். இவனை எதிர்த்துப் பகைவர்கள் போர் செய்வது கடினமாகும். இவை மட்டும் அல்ல மூவேந்தர்களும் வெற்றிபெறும் முரசுகளைக் கொண்டு விளங்குபவர்கள். இவர்களும் பாரியை வெல்வது கடினம் என்பதை,

"அளிதோ தானே, பாரியது பறம்பே !
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்" (புறம். 109:1-2)

எனும் பாடல்வழி அறியமுடிகிறது. அரசர்கள் பிறர் நாட்டைக் கைப்பற்றுவதும், அதன் வெற்றியை முரசினைக் கொண்டு ஒலிப்பதும் நடைமுறை நிகழ்வாகவே இருந்துள்ளது. இதனை விளக்கும் வகையில், மூவேந்தர் சூழ்ச்சியினால் பாரி இறந்ததால் அவன் நாட்டைக் கைப்பற்றிய வேந்தர்கள் வெற்றியின் நிகழ்வை முரசுகளைக் கொண்டு ஒலித்தனர் என்பதை,

"அற்றைத் திங்கள் ........... ..............
............. ................ ........... ........
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்: யாம் எந்தையும் இலமே" (புறம். 112)

எனும் பாடல் விளக்குகிறது. இதில் முரசு 'வென்று எறி முரசு' என்று சிறப்பிக்கப்படுகின்றது.

பறம்பு நாட்டின் அழிவு கண்டு வருந்தும் கபிலர், முரசையுடைய வேந்தனான பாரி இறந்துவிட்டதால் அவன் வளமிக்க நாடும் அழிந்து விடுமோ என்று கீழ்க்கண்ட வரியில் கூறுகின்றார்.

"பனைகெழு வேந்தரை இறந்தும்
இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே" (புறம். 119:6-7)

இவ்அடிகளின் மூலம் பாரி பல முரசுகளை உடையவனாகவும் முரசுடை வேந்தனாகவும் இருந்துள்ளான் எனத் தெளிவாகிறது. இதன் மூலம் 'முரசு' வேந்தனின் பெருமையினைக் கூறும் கருவி என்பதனை அறிய முடிகிறது..

போர்க்களத்தில் பல கருவிகள் கொண்டு போர் புரியும் வீரர்கள் முரசுகளையும் கையாண்டுள்ளனர். ஏழு வள்ளல்களில் ஒருவரான காரி இடி போன்று முழுங்கக்கூடிய முரசினை முழக்கி போர் செய்தான். இதனால் பகைவர்கள் யானைகள் அழிந்தன எனும் நிகழ்வை நப்பசலையார்,

"அரவுஉறி உருமின் முரசுசெழுந்து இயம்ப" (புறம்.126:19)

எனும் பாடல் அடியில் பாடியுள்ளார்.

குறுநில மன்னர்களில் ஒருவர் ஆய் அண்டிரன். இவன் பல வகைச் செல்வங்கள் வைத்திருக்கிறான். ஆனால் வெற்றியைத் தரக்கூடிய முரசு புகழற்று இருக்கின்றது. இதனால் நீ அருளற்ற அரசன் என முடமோசியார் கீழ்க்காணும் பாடல் அடியில் பதிவுசெய்கிறார்.

"முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே" (புறம். 127:10)

என்ற அடியின் மூலம் அரசனானவன் செல்வங்கள் பல வைத்திருந்தாலும் முரசினால் பெறப்படும் சிறப்பைப் பெற்றிருக்க வேண்டும் என உரைக்கப்படுவதை உணர முடிகிறது.

மேற்கண்ட பாடல்கள் வாயிலாக 'முரசு' பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் போருக்குரிய தொடக்கக் கருவியாக முரசு செயல்பட்டுள்ளது. அரசர் பல சிறப்புகள் பெற்றிருப்பினும் முழங்கும் முரசினை வைத்திருத்தல் முக்கியமாகின்றது. புதியதாக அரசப் பதவி ஏற்போர்க்கு முரசு வழங்கப்பட்டுச் சிறப்புச் செய்வதும் வழக்கமாக இருந்துள்ளது. மூவேந்தர் மூவர்க்குமுரியவை முரசு என்றும், பாரியும் முரசுடை வேந்தன் என்றும் அறிய முடிகிறது. பாரியை வெற்றிக் கொண்டு

**செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடயியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலைவியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –


தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 August 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month





# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, 6575615

✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை

✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்

✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2014–2015ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.**

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**